# அண்ணுவை டாக்டர் மில்லர் நுணுக்கமாக பரிசோதனை செய்தார்

சென்னை, ஜன. 22 இன்று காலை நியூயார்க்கிலிருந்து சென்னை வந்து சேர்ந்த அமெரிக்க வைத்திய நிபுணர் டாக்டர் மில்லர் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையைப் பரிசோதனை செய்தார். மேலும் பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில் அண்ணுவுக்கு ஆப்ரேஷன்செய்து அவரது உணவுக்குழாயில் இருந்து 3 அங்குல கட்டியொன்றை வெற்றிகரமாக எடுத்த டாக்டர் மில்லர் அண்ணுவை மிக நுணுக்கமாக பரிசோதனைசெய்தார். டாக்டர் மில்லடும் அண்ணுவும் சிறிதுநேரம் மனம்விட்டுப்பேசினர்.

பம்பாய் வைத்திய நிபுணர்களுடன் டாக்டர் மில்லர் கலந்தாலோசனை நடத்தினர்.

★★

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

இதழ் 345

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 10 ஜுலை: 4 வியாழக்கிழமை [23-1-69]

### எம். சி. சி கோஷ்டி இலங்கை வந்தது

கொழும்பு, புதன்

கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஒழுங்குசெய்த கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்து எம். சி. சி. கோஷ்டியினர் இன்று கட்டுநாயகா விமானநிலையம் வந்துசேர்ந்தனர். இவர்கள் இங்கு மூன்று போட்டிகளில் கலந்துகொள்வார்கள்.

கனிஷ்ட பல்கலைக்கழக விவகாரம்:

# அரசாங்கத்தின் நடவடிக்கை பிரிவினையைத் தூண்டுகிறது

## ஆட்சி மன்றத்தில் பண்டிதர் எச்சரிக்கை

கொழும்பு, புதன்

**கனிஷ்ட பல்கலைக்கழக விவகாரத்தில் பிரிவினையைத் தூண்டும் விதத்தில் நடந்து கொள்வதாக இன்று ஆட்சிமன்றத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் எச்சரித்தார்.**



தெஹிவளை கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் போதனை நடத்தவேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டதும் நாடெங்கிலுமுள்ள தமிழ் மாணவர்கள் பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகத்துக்குச் செல்ல வேண்டியிருப்பதும் தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலுப்படுவதாக இருக்கிறதென்றும், இதற்கு தேசிய அரசாங்கத்திலுள்ளவர்களே பொறுப்பாளிகள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

தெஹிவளை கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் தமிழிலும் போதனை நடாத்தவேண்டுமென்ற கோரிக்கைபற்றியும் அது நிராகரிக்கப்பட்டது பற்றியும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் இன்று ஆட்சிமன்றத்தில் பேசினர்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தேசிய ஒற்றுமை பற்றியும் ஐக்கியம்பற்றியும் கல்விஅமைச்சர் பேசுகிறுர். ஆனல் நாடெங்கிலுமுள்ள தமிழர்கள் தமிழில் பயில வேண்டுமானல், 'வடக்குக்குப் போங்கள்' என்று சொல்கிறுர். வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்கள் தவிர்ந்து, மற்றைய மாகாணங்களிலுள்ள தமிழ் மாணவர்கள் கல்வி பயில்வதற்குச் சுலபமாக தெஹிவளை கனிஷ்ட கல்கலைக்கழகத்தில் தமிழிலும் போதனை நடாத்த வேண்டுமென்று கோரினேம். ஆனல் 'தேசிய ஐக்கியத்தை'ப்பற்றிப் பேசுபவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## 'பத்திரிகைச் செய்தி தவறு' ஆட்சிமன்றத்தில் பிரதமர்

பம்பலப்பிட்டி, புதன்

சமீபத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு விசேஷ சன்மானம் வழங்குவதில்லையென மந்திரிசபை தீர்மானித்துள்தாக இன்று ஆங்கிலத் தினசரியொன்றில் வெளியான முதல்பக்கச்செய்தி தவறுனதென்று பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பத்திரிகையின் தலைப்புச்செய்தியில் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாமலிருந்தவர்களுக்கு சன்மானம் வழங்கத் தேவையில்லையென கடந்த திங்கட்கிழமைகூடிய மந்திரிசபையில் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச் செய்தி தவறுனதென்றும் மந்திரிசபையில் இதுபற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்த பிரதமர் இதுபற்றி அடுத்த மந்திரிசபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப் படுமெனத் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு

## இடைக்காலப்படி வழங்கப்பட மாட்டாது

### அரசாங்கம் செய்துள்ள முடிவு

கொழும்பு, புதன்

அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்காலப்படி வழங்க வேண்டுமென சம்பளக் கமிஷன் செய்திருந்த சிபார்சை அரசாங்கம் இன்று நிராகரித்துவிட்டது. திரு. எல். பி. டி. சில்வா தலைமையிலான புதிய சம்பளக்கமிஷனின் அறிக்கை கிடைத்தபின்னரே அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கூட்டுவது பற்றிஆலோசிக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்தது.

அண்மையில் நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமாகுவதற்கு முன்னரே பழைய சம்பளக்கமிஷன் இடைக்காலப்படி வழங் வேண்மென அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருந்தது.

## உள்ளூராட்சி அமைச்சருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு

### யாழ். மாநகரசபை செய்துள்ளமுடிவு

யாழ்ப்பாணம்' வியா,

இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்து ஐந்துநாட்கள் இங்கு தங்கவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர் பிரேமதாசாவுக்கு வரவேற்பளிப்பதென யாழ்ப்பாணம் மாநகரசபை முடிவு செய்துள்ளது. முன்ருண்டு காலத்தின் பின்னர் யாழ்ப்பாணம் மாநகரசபையினர் அமைச்சர் ஒருவருக்கு அளிக்கும் வரவேற்பு இதுதான்.

1966-ம் ஆண்டு யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்பட்டபோது உள்ளூராட்சி உதவி அமைச்சராக கடமையாற்றிய திரு. ஆர். பிரேமதாசா உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது இதுதான் முதல் தடவையாகும்.

மாநகரசபை கலைக்கப்பட்டபின்னர் 1967-ம் ஆண்டு நவீன மார்க்கட்டுக்கு அத்திபாரக்கல்நாட்ட வந்த பிரதமருடன் திரு. பிரேமதாசா இங்கு வந்தபோது மாநகர ஆணையாளர்களால் வரவேற்பளிக்கப்பட்டது. கலைக்கப்பட்ட மாநகரசபை மீண்டும் மக்களிடம் கையளிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாண நகருக்கு வரும் முதலாவது அமைச்சர் திரு. பிரேமதாசாதான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

29ம் திகதி காலை யாழ்ப்பாணம் வரும் அமைச்சரை யாழ்நகரின் வடக்கு எல்லையில் வைத்து நகரமுதல்வர் துணை முதல்வர் உட்பட சகல அங்கத்தவர்களும் வரவேற்பார்கள். அதன் பின்

(8-ம் பக்கம் பார்க்க)

## "பாடசாலை சுவீகரிப்பினல் சமயவளர்ச்சி பாதிப்பு"

### நினைவு விழாவில் யாழ். மேயர்

யாழ்ப்பாணம், வியா.

''பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின்னர் இந்துக்கல்லூரிகள் சமய போதனையற்ற கல்லூரிகளாக மாறிவருகின்றன. ஒரு சில கல்லூரி அதிபர்கள் சமய வளர்ச்சியில் அக்கறை எடுத்து வந்தபோதிலும், அது முற்ருக பயனளிக்க கூடியதாக இல்லை. இந்துக் கல்லூரிகளில் சமயத்தின் தனித்துவம் மறைந்துவிட்டது. இந்த நிலையில் எந்த சமயத்தின் சிறப்பைப்பற்றி நல்நோக்கங்களைப் பற்றி நமது மாணவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டியது அவசியம்.''

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில், சிவநெறிச் காவலர் முத்துச்சாமிப் பிள்ளையின் நினைவு விழா நேற்று மாலை நடந்தபோது யாழ்ப்பாண மேயர் திரு.சி. நாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

சைவபரிபாலனசபை முன்னுள் தலைவர் திரு. த. முத்துசாமிப்பிள்ளையின் உருவப்படத்தை வழக்கறிஞர் திரு. ஏ. வி. குலசிங்கம் திரைநீக்கம்செய்து வைத்தார்.

திரு. வே. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேயர் திரு.நாகராசா மேலும் கூறியதாவது:- நீதிமன்றத்தில் தமிழ் மரபின் படி உடையணிந்து சைவநெறிப்படி வாழ்க்கையை நடத்திவந்த திரு. முத்துசாமிப்பிள்ளை பல அரிய தொண்டுகளை சைய்திருக்கின்ருர். நீதிபதியாக கடமையாற்றும் போது பாரபட்சமின்றி அந்தப்பதவிக்குஏற்றகௌரவத்வடன் நடந்து கொள்வார்.

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான ஒரே ஒரு இந்துக் கல்லூரி தான் உண்டு.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம், வியாழன்

பிரயாணிகள் வசதியை முன்னிட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தின் நான்கு பிரதான கதவுகளும் இன்று முதல் திறந்து விடப்பட்டுள்ளன.

(கா.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6 30, 9-30
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
**நான் ஆணையிட்டால்**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**நான் யார் தெரியுமா?**

**ராஜா** தினசரி 4 காட்சிகள் **2வது வாரம்!**
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
**ஒளிவிளக்கு**
[ஈஸ்ட்மென் கலர்) (எஸ்.ரி.ஆர். வெளியீடு)
இப்படம் வடமாகாணத்தில் வேறு எந்த திரைகளிலும் திரையிடப்படமாட்டாது.

கிங்ஸ்லி பிளாஸா
ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டுநகர்)
மக்கள்திலகம் நடிகையர்திலகம்
**எம்.ஜி.ஆர் ★ சாவித்திரி**
எம். ஆர். ராதா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
கௌரி பிக்சர்ஸ்
**பரிசு**
டைரக்‌ஷன் யோகானந் இசை கே. வி. மகாதேவன்

இன்று முதல்
**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
எஸ். எஸ். ஆர், தேவிகா
முத்துராமன், காஞ்சனு
நடித்த
மு. கருணநிதியின்
**மறக்க முடியுமா!**
(சிலதினங்களுக்கு மட்டும்)


## வரி விளம்பரம

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத. இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி, குபத வித்யாதணய, நிட்டம்புவ, 495

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓர் ஏஜன்ஸீஸ் ஸ்தாபனத்திற்கு தொலைபேசி சம்பந்தமாய் வெளியில் வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை. மாத வேதனம் ரூபா 100/- தேர்ந்தெடுக்கப்படுவோர் சிறு தொகை வைப்புப்பணமாய் செலுத்தல் வேண்டும். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 614, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 614

பியோன் வேலைக்கு ஓர் ஆள் வேண்டும். திருஞானஸ் அன்கோ, 31, பவகவுஸ் ரூேட்டு, யாழ்ப்பாணம். 618

### விற்பனைக்கு

A 40 சி. எல். 8700 தொடர்புள்ள கார் விற்பனைக்குண்டு. மாற்றமும் செய்யலாம். ரூபா 2,250 நிதிவசதியுண்டு. நேரில் பார்வையிடலாம். சி.வேலாயுதபிள்ளை, வட்டு. மேற்கு, (அடைக்கலந் தோட்ட கந்தசாமி கோவிலுக்கு அருகில்) 617

அல்லைப்பிட்டி, புதன்

தீவுப் பகுதியில் இம்முறை நெல் விளைச்சலுக் குப் போதிய மழை பெய்யாத தினுல் பயிர்கள் கருகத் தொடங்கி விட்டன. இதனுல் இப்பகுதி விவசாயிகள் வயல் நிலங்களில் மாடுகளை கட்டத் தொடங்கியுள்ளனர்.


**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
ARCH HALL Jr
in
'DEAD WOOD' 76
(Technicolor-Techniscope)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**


# மாவை ஆலயவழக்குகள் இன்று விசாரணை

அளவெட்டி, புதன்

மாவை ஆலய வழக்குகள் நாளை மல்லாகம் நீதி மன்றத்தில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்படும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் சென்ற வருட உற்சவத்தின் போது கோவிலுள் செல்ல விடாது தடுத்தது, கிணற்றில் தண்ணீர் அள்ள விடாது தடுத்தது, பலாத்காரம் புரிந்தது போன்ற குற்றங்கள் சாட்டி ஹரிஜனர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் வவனியா முன்னாள் எம்.பி. திரு.சி.சுந்தரலிங்கம் உட்பட மற்றும் பல தொண்டர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளே நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வழக்குகள் மல்லாகம் மாஜிஸ்திரேட் எம். சண்முகலிங்கம் முன்னிலையிலேயே விசாரணை செய்யப்படும்.

## பட்டினசபை — வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறைப் பட்டினத்தில் உள்ள நெடியகாடு என்னும் இடத்தில் கந்தோர் கட்டிடத்தின் முதல் பகுதியை டி. பி. சி. மட்டத்துக்கு நிர்மாணிப்பதற்கான கேள்விகள்.

(1) வல்வெட்டித்துறையில் உள்ள நெடியகாடு பகுதியில் கந்தோர் கட்டிடத்தின் முதல் பகுதியை டி. பி. சி. மட்டம்வரை நிர்மாணிப்பதற்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து கேள்விகள் வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவரால் 17 1 69 திகதியில் இருந்து 27—1—69 திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விப்பத்திரகாரர்கள் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரங்கள் பட்டினசபைக் கந்தோரில் 27—1 69 திகதி காலை 10-00 மணிக்குத் திறக்கப்படும்.

(3 வல்வெட்டித்துறைப் பட்டினசபையுடனே அல்லது வேறு எந்த உள்ளூர் ஆட்சி மன்றத்துடனே, அல்லது அரசாங்க இலாகாவுடனே கட்டட வேலைக்கான ரூபா 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு மாத்திரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

(4) எல்லாக்கேள்விப்பத்திரங்களிலும் இரு பிரதிகள் இருக்கவேண்டும்! கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் ''நெடியகாடு கந்தோர் கட்டிட முதல்பகுதி டி. பி. சி. மட்டம்வரை நிர்மாணிப்பதற்கான கேள்விகள்'' எனக்குறிப்பிடவேண்டும்.

(5) கேள்வி வைப்புப்பணமாக ரூபா 50 -, கேள்விப்பத்திரத்துக்குரிய பணமாக ரூபா 15/- பட்டினசபைக் காரியாலயத்தில் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டைக் கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரத்துக்கான ரூபா 15/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(6) கேள்விப்பத்திரங்களை தலைவர், பட்டினசபை, வல்வெட்டித்துறை என்ற விலாசத்துக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம். உள்ளூர் கேள்விப்பத்திரகாரர் இவ்வாறு அனுப்பாவிட்டால் தனதாள்மூலமோ, அல்லது தானே சபைக் காரியதரிசியிடம் கேள்வியை நேரடியாகக் கொடுக்கலாம்.

(7) தகுதிபெறும் கேள்விக்காரர் வேலையை உடனடியாக ஆரம்பிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

(8) கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது ஒரு பகுதியை ஏற்கவோ சபைக்கு அதிகாரமுண்டு.

(9) இதைப்பற்றிய மேல்விபரங்களை அறியவிரும்புவோர் வல்வெட்டித்துறைப் பட்டினசபைக் காரியதரிசியிடமிருந்து அறிந்துகொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் சபையோடு ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்குமுன் சபை தீர்மானித்துள்ள பிணைப்பணத்தைச் செலுத்த வேண்டும்.

தலைவர்
பட்டினசபை, வல்வெட்டித்துறை.

பட்டினசபைக் காரியாலயம்,
வல்வெட்டித்துறை.
15 – 1 – 69. 1163


எம்- ஜி. ஆர். இதுவரை நடித்துமுடித்த 100 படங்களிலும் முதற்றரமானதும் தென்னுட்டில் அதிக வசூலைப் பெற்று பெருஞ் சாதனையை உண்டாக்கியதும், தனக்குப் பிடித்தமானபடமும் ''குடியிருந்த கோயில்'' என்பது எம். ஜி. ஆரின் தீர்ப்பு.



**வின்ஸர் - ரீகல்**
ஆகிய இரு திரைகளிலும்
**நாளை முதல் ஆரம்பம்**
**தினசரி 4 காட்சிகள்**

வின்ஸர் காட்சி நேரங்கள்!
காலை 10-00, பிற்பகல் 2-00, 6-00, 9-00.

ரீகல் காட்சி நேரங்கள்:
காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-30.

(எம். ஜி. ஆர். இருவேடங்களில்)
G. N. வேலுமணி அளிக்கும்
டைரக்‌ஷன்: K. சங்கர்
கதை வசனம்: 'சொர்ணம்'
**குடியிருந்த கோயில்**
(முழு நீள ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசு கூட்டுமுயற்சி யோசனையை சோவியத்யூனியன் ஏற்றது

## பிரிட்டனும் இணக்கம்?

### அமெரிக்க நிலை தெரியவில்லை

பாரிஸ். ஜன. 22

**மேற்காஸிய அமைதிக்கு பிரான்ஸ் தெரிவித்த யோசனையை சோவியத் யூனியன் ஏற்றுக்கொண்டிருக்கிறது.**

மேற்காஸிய சம்பந்தமாக 1967-ல் ஐ. நா. பந்தோபஸ்துச்சபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கு இந்த யோசனை ஏற்புடையதாய் இருக்கிறதென்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

மேற்காஸியாவில் நியாயமான நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் வகையில் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் அங்கம் வகிக்கும் நான்கு வல்லரசுகளும் கூட்டுமுயற்சியில் இறங்கவேண்டும் என்று பிரான்ஸ் யோசனை தெரிவித்திருந்தது இந்த யோசனையை ஏற்றுக்கொண்டுள்ள முதல் வல்லரசு நாடு ரஷ்யாதான். அமெரிக்கா இன்னும் இந்த யோசனை பற்றி ஆராய்ந்துவருகின்றது. பிரிட்டனும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

# சனிக்கிழமை முழு அளவிலான வியட்னும் அமைதிப்பேச்சு

பாரிஸ், ஜன 22

**முழு அளவிலான வியட்னும் அமைதிப் பேச்சுக்கள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகும் என்று இப்பொழுது அறிவிக்கப் பட்டுள்ளது.**

இத்தகவலை வியட்னும் அமைதிப் பேச்சுக்களுக்கான அமெரிக்காவின் புதிய தலைமைப் பிரதிநிதி திரு. ஹென்றி கபட்லாட்ஜ் வட வியட்னும் பிரதிநிதிகளை சந்தித்து பேசியதின் பின்னர் அமெரிக்க அதிகாரி ஒருவர் வெளியிட்டார். வட வியட்னும் அதிகாரிகளும் இச் செய்தியை உறுதிப் படுத்தியுள்ளனர். திரு கபட்லாட்ஜ் பாரிஸ் வந்தவுடனேயே வடவியட்னும்பிரதிநிதி திரு. பாம்டாங்லாங்குடனும் மற்றவர்களுடனும் ஆலோசனைகள் செய்தார். அதன்பிறகு எதிர்வரும் சனிக்கிழமை முழு அளவிலான வியட்னும் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப் பட்டது.

இதற்கிடையில் தென் வியட்னுமில் பல இடங்களில் வியட்காங்கியர் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சைகோனில் ஓர் இடத்தில் அமெரிக்க சிப்பாய்கள் கோஷ்டியொன்றின் மீது வியட்காங்கியர் எறிகுண்டு ஒன்றை வீசிய பொழுது 6 பேர் காயமடைந்தனர்.

சைகோனில் தென்வியட்னும் ஜனுதிபதி ஜெனரல் தியூ அங்குள்ள அமெரிக்க தூதருடன் ஆலோசனைகள் நடத்தினர். வியட்னும் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் தென்வியட்னும் குழுவின் பிரதம ஆலோசகரான உப ஜனுதிபதி எயார் மார்ஷல் கா-ஓ-கீயும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டார். வியட்னுமில் அமைதி ஏற்பட்டு அமெரிக்க படைகள் விலகிச் செல்லும் பட்சத்தில் தென் வியட்னும் நிலைமை என்னவென்பதே அவர்களுக்கு பெரிதும்கவலையளிக்கும் அம்சம் எனக் கருதப்படுகின்றது.

## தற்கொலை புரிந்த செக். மாணவர்

பிராக், ஜன. 22

செய்தித் தணிக்கையை எதிர்த்து தனக்குத்தானே தீயிட்டு தற்கொலைசெய்து கொண்ட செக். மாணவரான யங்பாலாக் என்பவரின் சடலம் சனிக்கிழமையன்று பிராக் நகரின் தெருக்கள் வழியாக எடுத்துச்செல்லப்படவிருக்கின்றது. தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இன்னெரு இளைஞரைக் காப்பாற்றுவதற்கு டாக்டர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## ஜோர்டானுக்கு ரஷ்ய ஆயுதம்

அம்மான், ஜன. 22

இஸ்ரேலுடனுன சண்டையில் ஜோர்டான் இழந்த ஆயுதங்களை ஈடுசெய்யும் வகையில் புதிய ஆயுதங்களைப் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்று ஜோர்டானுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்டுள்ளது. சண்டையின்போது ஜோர்டான் இழந்த ஆயுதங்களுக்குப் பதிலாக நவீன ஆயுதங்களை ரஷ்யாவிடம் பெற்று ராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ள இந்த ஒப்பந்தம் வழிசெய்யும் என்று தெரிகின்றது.

## அயூப் எதிர்ப்பு வலுக்கிறது

ராவல்பிண்டி. ஜன. 22

பாகிஸ்தானில் அயூப்கான் ஆட்சிக்கு எதிராக ராவல்பிண்டியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது பொலிஸார் மாணவர் கூட்டம் ஒன்றின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் சமார் 14 பேர் காயமடைந்ததாகத் தெரிகின்றது. ஆறு பொலிஸ் வீரர்களும் காயமடைந்துள்ளனர். மாணவர்கள் டெலிபோன் கம்பிகளை அறுத்தும், கல்லெறிந்தும் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். ஒரு பஸ்ஸுக்கும் தீயிட்டனர். சுமார் 50 பேர் கைதுசெய்யப்பட்டனர். முன்னர் ஏற்பட்ட ஒரு கைகலப்பில் 20 பேர் காயமடைந்தனர் 33 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

## அபராத

அளவெட்டி, புதன்

சட்டவிரோதமாக இரண்டு திரும் வடிசாராயம் வைத்திருந்ததாக நாகன் பாலன் என்பவருக்கு எதிராக கலால் பகுதியினரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மல்லாகம் நீதிபதி 20 ரூபா அபராதம் விதித்தார்.

## சென்னையில் கூட்டங்களுக்கு தடை

சென்னை, ஜன. 22

சென்னை நகரில் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

இந்த உத்தரவை நகர பொலிஸ் கமிசனர் விடுத்துள்ளார். நகரில் நாளை நடைபெற விருப்பதாகக் கருதப்படும் வேலை நிறுத்தங்களை யொட்டி இந்த உத்தரவிடப் பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

## தன்னை மறந் ார்

அளவெட்டி புதன்

நீதிமன்ற எதிரிக் கூண்டில் அமர்ந்தவாறே தன்னையும் இருக்குமிடத்தையும் மறந்து துயிலில் ஆழ்ந்தஒருவர் நீதிபதியின் உத்தரவின் பேரில் தட்டி எழுப்பப்பட்டார்.

இச் சம்பவம் சென்ற திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

கீரிமலை கொலை முயற்சி வழக்கு விசாரணைமல்லாகம் மாஜிஸ்திரேட்திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில்நடந்துகொண்டிருக்கையில் எதிரிக் கூண்டில் அமர்ந்திருந்த ஆறும் எதிரி முகத்தைகூண்டில் வைத்தவாறே உறங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டார்.

இதைக்கண்ட நீதிபதி குறிப்பிட்ட எதிரியை உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பச் செய்து எதிரிக் கூண்டில் உஷாராக நிற்குமாறு கட்டளையிட்டார்.

பின் சுமார் அரைமணித்தியாலத்தின்பின் குறிப்பிட்ட எதிரி ஆசனத்தில் அமர அனுமதிக்கப்பட்டார்,

## இனம் யோசனை ரத்து

கொழும்பு புதன்

அரசாங்க ஊழியர் சமீபத்தில் வேலை நிறுத்தம் செய்தபோது அந்தவேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் சேவையாற்றிய அரசாங்க ஊழியருக்கு 'இனம்' வழங்குவதென்ற யோசனையை [illegible] விடுவதென [illegible] ந்திரிசபை நேற்றுத் தீர்மானித்தது. இப்படி இனம் வழங்குவது அரசாங்க ஊழியரிடையே பகைமையை ஏற்படுத்துமென்பது தான் இதற்குக் காரணமாம்.

## கணவரின் பணியை தொடர்ந்து செய்வாராம்

### புதுடில்லியில் திருமதி கிங்

புதுடில்லி. ஜன. 22

அமெரிக்க சிவில்உரிமை இயக்கத் தலைவர் காலஞ்சென்ற டாக்டர் மாட்டின் லூதர் கிங் மனைவி நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த பொழுது அவருக்கு அன்பான வரவேற்பு அளிக்கப் பட்டது.

உலக அமைதிக்காகப் பாடுபடுகிறவர்களுக்கு வழங்கப்படும் நேரு பரிசை திருமதி கிங் தமது கணவரின் சார்பில்பெற்றுக்கொள்வார். டாக்டர் கிங் நினைவாக இந்திய தபால்இலாகா தபால் தலையொன்றையும் வெளியிட்டிருக்கின்றது.

தமது வருகைபற்றி திருமதி கிங் குறிப்பிடுகையில் உலகின் சகோதரத்துவக் கொள்கை பரவுவதற்கான முதல்படி ஆரம்பமாகியிருப்பதாகவும் தமது கணவர் மேற்கொண்ட பணிகளைத் தம்மால் முடிந்தவரையில் தொடர்ந்து செய்யப்போவதாகவும் கூறினர் திருமதி கிங் இந்தியாவில் 5 நாட்கள் இருப்பார்.

## திரண்டசெல்வத்தை பகிர்ந்து அனுபவிப்போம்

### நிக்ஸன் விருப்பம்

வாஷிங்டன், ஜன. 22

அமெரிக்காவின் புதிய ஜனுதிபதி திரு. நிக்ஸன் பதவியேற்பு வைபவத்தின் போது நிகழ்த்திய கன்னி உரையின் முக்கியபகுதி இங்கு தரப்படுகின்றது.

''எங்கு சமாதானம் என்பதனை மக்கள் புரிந்துகொள்ளாது தடுமாறுகின்ருர்களோ அங்கே சமாதானத்தை அவர்கள் தெரிந்து கொள்ள கற்றுக்கொடுப்போம். எங்கு அமைதிவலுவிழந்து தவிக்கிறதோ அங்கே அதனை வலுப்பெறச் செய்வோம். சமாதானம் எங்கு நிரந்தரமற்றதாகவிருக்கிறதோ, அங்கேசமாதானத்தை நிலைநாட்டுவோம் நிரந்தரமாக.

''எல்லோரையும்நாம்நமது நண்பர்களாகக் கொள்ளாவிட்டாலும் விரோதித்துக் கொள்ளாமலாவது இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். வேருேர் நாட்டின் வேற்றியின் அடிப்படையில் எழும்சமாதானத்தை அமெரிக்கா ஆதரிக்காது. அந்தந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ள அந்தந்தநாட்டு மக்களுக்கு உரிமை இருக்கவேண்டும் என்பதை அமெரிக்கா வலியுறுத்துகின்றது. மற்றவர் நாட்டை, அபகரிக்க உடந்தையாகஇருக்கமாட்டோம். மனிதனுடைய வாழ்வுவளம் பெறவே எந்தக்காரியத்தையும் நாம் செய்தாகவேண்டும்.

''எங்களோடு ஒத்துழைக்க விடும்பும் எவரோடும் நாம் ஒத்துழைக்க ஆசை கொண்டுள்ளோம். ஆயுதப் போட்டியை அகற்ற விரும்பி எம்மோடு உறவுகொள்ளும் அனைவரையும் நாம் வரவேற்கிருேம். இதனுல் சமாதானமும் அமைதியும் தோன்றும். ஏழைகளை கஷ்டமின்றி வாழ வைக்கவும் பாடுபடுவோம்.

''விண்வெளியை நாம் ஆட்படுத்தும்போது சேர்ந்தே ஒத்துழைப்போம். நமது சாதனைகளை அனைவருக்கும்பொதுவானதாகஆக்கிக்கொள்வோம். எதிர்த்துக்கொண்டு இருப்பதை விடுத்து உலக நாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தங்களுடைய பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள முன்வந்து கொண்டிருக்கின்றன. இது ஒரு நல்ல சகாப்தம் உருவாகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

#### மனித கனவுகள் நனவாகும் காலம்

'சமாதானத்தை பாதுகாக்கக்கூடிய ஒரு நாட்டின் சேவையை உலகம் எதிர்பார்த்திருக்கிறது. அந்த அறைகூவலுக்கு ஏற்ற ஒரு நாடாக—உலகத்தைநெருக்கடிகளிலிருந்து பாதுகாத்துக்கொண்டு செல்லத் தக்கதான ஒருநாடாக அமெரிக்கா இன்று வளர்ச்சியடைந்திருக்கிறது. நாகரீகத்தின் ஆரம்பகாலந் தொடக்கம் மனிதன் கண்டு வந்த கனவு நனவாகும் காலம்விரைவில்வந்துவிடும். வருங்கால சமுதாயம நமது நாட்டைப் பார்த்து, எதிர்காலத்தில் உலகத்தை மக்கள் வாழ்வதற்குத் தகுந்த இடமாக மாற்றித் தந்தது அமெரிக்கா என்று வாயார வாழ்த்தும். இந்த அறைகூவலை அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு இன்று ஆயத்தமாகி விட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

''நம்மிடம் திரண்ட செல்வமிருக்கிறது. அதனை உலகோடு பகிர்ந்து அனுபவிப்போம். இன்று நாம் போராட்டங்களில் சிக்கியிருக்கிருேம். அமைதிக்காக ஏங்குகிருேம். பிளவுபட்டுள்ளோம், ஒற்றுமையையாசிக்கிருேம். எதிர்காலத்தை செம்மைப்படுத்தும் கரங்களை எதிர்பார்க்கிருேம்.

''அதிகமாக நாம் வீணுக வாயடிப்பதில் பொழுதைக் கழிக்கிருேம் எங்களுடைய குரலை சற்றுத் தணித்து ஏனையவர்களின் குரலும் கேட்பதற்கு வழிவிடுவோம். எதிர்ப்புக் கோஷங்களைக் குறைத்துக்கொள்வோம். எனது நிர்வாகம் அமைதியான கோரிக்கைகளை நிச்சயம் வரவேற்கும். மக்களின் குரலுக்கு நிச்சயம் மதிப்புக்கொடுக்கும். புறக்கணிக்கப் பட்டவர்களையும், பின்தங்கிவிட்டவர்களையும் முன்னணிக்குக் கொண்டு வந்து ஏனையோருடன் சரிசமமாக அனைத்தையும்நாம் செய்தே தீருவோம்

பலதரப்பட்ட முன்னேற்றங்களுக்காகவும் அமெரிக்கா கடந்த ஆண்டுகளில் பல சட்டதிட்டங்களை உருவாக்கியிருக்கிறது. ஏராளமான பணத்தைச் செலவிட்டிருக்கிறது. நல்ல தொழில் வாய்ப்புகளையும், நல்ல உணவு, உறைவிட வசதிகளையும் உருவாக்கிக் கொடுப்போம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சொல்லிக்கொண்டிருப்பதைவிட சேவையை உண்மையாக நேசித்து செய்யுங்கள். கடவுளை நான் நேரில் காணவில்லை. ஆனால் புனிதமான இருதய பூர்வமான சேவை செய்வதன்மூலம் அவரைக் காண முடியும் என்பதை உணர்கின்றேன்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box 43, Jaffna. Telephone 380

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம்10ந் திகதி
(23 - 1 - 69)

## மேலும் ஒரு கொத்து அரிசி

பங்கீட்டரிசிப் புத்தகத்துக்குஇப்போதுவாரத்துக்குஆளுக்கு ஒருகொத்து அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த இலவச அரிசியுடன் கொத்து ஐம்பது சதமாக மேலும் ஒரு கொத்து அரிசி வழங்குவதற்கிருந்த உத்தேசத்தை அரசாங்கம் கைவிட்டுவிட்டது. ''பங்கீட்டு அரிசியில் ஒரு கொத்து வெட்டப்பட்டது. நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் வெற்றிபெறுவதற்கு ஒரு காரணம். எனவே உணவு உற்பத்தி அதிகரிப்பைப் பாதிக்கச் செய்வதற்கு நான்விரும்பவில்லை'' என்று பிரதமர் இதற்குக் காரணம் கூறியிருக்கிறார். இந்தக் காரணம் சரியா, தவறு?

அதிக விலைக்கு அரிசியை வெளிநாடுகளிலிருந்துஇறக்குமதிசெய்து குறைந்த விலைக்குமக்களுக்கு விநியோகம்செய்து வந்த அரசாங்கம் உலகச்சந்தையில் அரிசிவிலை அதிகரித்ததாலும் உலக நாடுகளில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும் பங்கீட்டரிசியின், அளவைப் பாதியாகக் குறைத்தது. சீனி மற்றும் வேறு இறக்குமதிப் பொருள்களினுல் ஏற்படக்கூடிய லாபத்தை அரிசி விற்பனையினுல் ஏற்படக்கூடிய நஷ்டத்துக்கு ஈடுசெய்த போதிலும் பங்கீட்டரிசியின் அளவைக் குறைப்பதனுல் ஏற்படக்கூடிய எதிர்ப்பை ஒரு கொத்து அரிசியையும் இலவசமாக வழங்க முன்வந்ததன் மூலம் சமாளித்துக் கொண்டது. என்றுலும் பங்கீட்டரிசியின் அளவைக் குறைத்ததன்மூலம் தீமையிலும் நன்மை என்ற வகையில் உள்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிக்க வழி பிறந்தது. பங்கீட்டரிசியின் அளவைக் குறைத்ததனுல்தான் உணவு உற்பத்தி அதிகரித்தது என்று பிரதமர் காரணம் கூறினுலும், இலங்கை அரசியல் சுதந்திரமடைந்த நாளிலிருந்து உணவு உற்பத்தி அதிகரிப்பில் இதுவரை ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்கள் கவனம் செலுத்தி வந்திருந்தால் உள்நாட்டில் உணவில் தன்னிறைவு கண்டிருக்க முடியும். அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டபின் திரு. டட்லி சேனநாயக்காவின் 'தேசிய அரசாங்கம்' உணவு உற்பத்தியில் காட்டிய அக்கறையும் ஊக்கமும் முன்னரே காட்டப்பட்டிருந்தால் நிலைமை வேருக இருந்திருக்கும்.

பங்கீட்டரிசியின் அளவைப் பாதியாகக் குறைத்ததனுல் தான் உணவுஉற்பத்தி அதிகரித்ததென்று சொல்ல முடியாது. பங்கீட்டரிசியின் அளவைக் குறைத்ததனுல் அரிசி இறக்குமதி குறைந்ததும் வெளிநாடு செல்லும் பெருந் தொகைப்பணத்தில் ஓரளவு மீதமானதும் உண்மைதான். ஆனுல் இப்போது இலவசமாக வழங்கும் ஒரு கொத்துஅரிசியுடன் மேலும் ஒரு கொத்து அரிசியை அது உள்நாட்டு அரிசியானுலும் கட்டுப்பாட்டு விலை விதித்து பங்கீட்டு முறையில் விற்பதானுல் இலவச அரிசி விநியோகத்தின்மூலம் ஏற்படும் நஷ்டத்தையும் அதேசமயம் தனியாரிடம் அதிக விலை கொடுத்து மக்கள் அரிசி வாங்காமல், நியாய விலைக்கு அரிசி பெறுவதற்கும் வழி சமைக்கலாம். உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் அதேசமயம் மக்கள் அதிகவிலை கொடுத்து அரிசி வாங்காமலும் மக்களுக்குத் தேவையான அரிசி நியாயமான விலையில் கிடைக்கவும் அரசாங்கம் வழிவகுக்க முடியும் என்பது நமது கருத்து.

## மேற்கு ஆசியா

இஸ்ரேலியர்கள் கைப்பற்றித் தம்வசம் வைத்துக்கொண்டுள்ள அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறினுலொழிய இஸ்ரேலுடன் அரபு நாடுகள் பேச்சுவார்த்தை நடத்துவதென்ற பேச்சுக்கே இடமில்லையென ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாசர் தெரிவித்திருக்கிறுர். இதேசமயம் இஸ்ரேலியர்களுக்கு எதிராக அராபியருக்கு ஆதரவான கொரில்லா இயக்கங்களுக்கும் நாசர் ஆதரவு தெரிவித்திருக்கிறுர். நாசருக்குசமாதானத்தில்உண்மையான ஆர்வமில்லையென்று இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கிறுர். மொத்தத்தில் மேற்காசிய நிலைமை மோசமடைவதற்கான வழிகள்தான் அதிகரித்து வருகின்றனவேயொழிய நிலைமை சீர்திருந்தி அமைதிக்கான வழிகள் தோன்றுவதாகக் காணேம்.

யுத்தம் செய்து கைப்பற்றிய பகுதிகளைக்கைவிட இஸ்ரேல் மறுத்துவருவது ''வல்லான் வகுத்த தேவாய்க்கால்'' என்பதற்கு ஒப்பாகும். இதற்கு விட்டுக்கொடுத்தால் வலிமை படைத்த நாடுகள்தான் உலகில் மிஞ்சும். இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் உண்மையிலேயே உலக அமைதியிலும் சமாதானத்திலும் ஆர்வம் கொண்டிருந்தால், தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர் வாபஸ் பெற்று மேற்காசியப் பிரச்னைக்கு நிரந்தரமான சமாதானத் தீர்வுக்கு வழிவகுக்கலாம். இதேசமயம் இஸ்ரேலுக்கு எதிரான பகை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதை அரபு நாடுகளும் சிறிது நிறுத்தி இஸ்ரேலை அங்கீகரித்து நேரடிப் பேச்சுக்கு முன்வருவதும் அவசியமாகும், இதற்கு முன்னேடியாக பிரான்சைப் பின்பற்றி இஸ்ரேலியருக்கோ அராபியருக்கோ ஆயுதஉதவி அளிப்பதையும் அமெரிக்கா, சோவியத்யூனியன் போன்ற வல்லரசுகளும் நிறுத்திவிட வேண்டும். இதற்கு வல்லரசுகள் முன்வருமா?

# விளங்கிக்கொள்ளும் உமக்குகொடுக்கஎன்

## திருக்கேதீஸ்வர சிவராத்திரிக்கு விசேஷ ரயில், பஸ் சேவை

யாழ்ப்பாணம், வியா.

அடுத்த மாதம் 15-ம் திகதி நடைபெறவிருக்கும் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் செல்ல விசேஷ புகையிரத சேவையும், திருக்கேதீஸ்வரம் புகையிரத நிலையத்திலிருந்து கோவில்வரை விசேஷ பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த ரயில் சேவையும், பஸ்சேவையும் அடுத்த மாதம் 15ம் திகதியிலிருந்து 16ம் திகதிவரை நடைபெறும்.

15ம் திகதி காலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் உத்தரதேவியில் திருக்கேதீஸ்வரத்துக்கென விசேஷமாக 8 பெட்டிகள் இணைக்கப்படும். இவை பிரத்தியேக ஒரு புகையிரத மூலம் மதவாச்சியிலிருந்து பொருத்தப்பட்டு நண்பகல் 11-50க்கு திருக்கேதீஸ்வரம் சென்றடையும்.

15ம்திகதி காலை7-35மணிக்கு திருக்கேதீஸ்வரத்துக்கென விசேஷ ரயில் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும். இது அன்று மாலை 4-15 மணிக்கு திருக்கேதீஸ்வரம் சென்றடையும்.

16-ம் திகதி காலை தலைமன்னரிலிருந்து 10 மணிக்கு திருக்கேதீஸ்வரம் வந்து சேரும் கொழும் ரயில் அனுராதபுரம் வழியாக அன்றிரவு 7 மணிக்கு கொழும்பு சென்றடையும்.

16ம் திகதி காலை 11 மணிக்கு திருக்கேதீஸ்வரத்திலிருந்து புறப்படும் விசேஷ யாழ்ப்பாணப் புகையிரதம் அன்றுமாலை 5-55 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்டேசனை வந்தடையும்.

சிவராத்திரியை முன்னிட்டு விசேஷ சலுகை அளிக்கப்பட்ட கட்டணம் புகையிரத இலாகாவினரால் அறவிடப்படவிருக்கின்றது. இந்தப் புகையிரதச்சீட்டுக்கள் 14-ம் திகதியே விற்பனைக்கு வரும்.

3ம் வகுப்பில் ஒரு தனி நபர் சென்று திரும்ப 8 ரூபா 65 சதம்.

2ம் வகுப்பில் ஒரு தனி நபர் சென்று திரும்ப 17 ரூபா 65 சதம்.

10 பேர் கொண்ட குழுவாகச் சென்றுல் தனி நபருக்கு பின்வரும் கட்டண விகிதம் அறவிடப்படும்:

3-ம் வகுப்பு; 7 ரூபா 40 சதம்.

2-ம் வகுப்பு: 14 ரூபா 70 சதம்.

இந்தச் சீட்டுகள் 10 பிரயாணிகளுக்கும் சேர்த்து ஒன்றுகவே வழங்கப்படும். குழந்தைகளாகவோ, பாடசாலை மாணவர்களாகவோ இருந்தால் முழுப் பிரயாணச்சீட்டுச் சலுகை 20 பேருக்கு வழங்கப்படும்.

திருக்கேதீஸ்வரம் சென்று திரும்ப 14-ம், 15-ம் திகதிகளில் விற்பனை செய்யப்படும் டிக்கட்டுகள், 16-ம், 17-ம் திகதிவரை மட்டும் பாவிக்க அனுமதிக்கப்படும்.

வழக்கம்போல வவனியா, மன்னர் ஆகிய

சேவை இம்முறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக திருக்கேதீஸ்வரம் புகையிரத நிலையத்திலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளகோவிலுக்குஇணைப்பு பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

புகையிரத பிரயாணிகளுக்கு மதவாச்சி, செட்டிகுளம், திருக்கேதீஸ்வரம் புகையிரத நிலையங்களில் இலவச குளிர்பானம், உணவு ஆகியன வழங்கவும் பல சமய ஸ்தாபனங்களும், சங்கங்களும் முன்வந்துள்ளன. (கா. நி.)

## வெளிநாடு செல்கிறுர்

யாழ்ப்பாணம், வியா.

கடந்த 19 வருடங்களாக அரசாங்க விற்பனவு இலாகாவில் பொறுப்பதிகாரியாயிருந்த திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, அரசாங்க நன்கொடை பெற்று வெளிநாடு செல்கின்றுர். இம்மாதம் 25-ம் திகதி கட்டுநாயகா விமான நிலையத்தில் தமது பிரயாணத்தை ஆரம்பிக்கும் திரு. தாமோதரம்பிள்ளை அவுஸ்திரேலியா, ஜப்பான், கனடா முதலிய நாடுகளில் விவசாயம் மற்றும் கோழிப்பண்ணை முறைகள் பற்றி ஒன்பது மாதகாலம் பயிற்சி பெற்றபின் நாடு திரும்புவார். துன்னலை வடக்குக் கிராமாதிகாரியாயிருந்து காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரரான இவர் கரவெட்டி திருஇருதயக்கல்லூரியின் பழைய மாணவராவார்,

## இராணுவத் தாக்குதல் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

வல்வெட்டித்துறை, புதன்

இம்மாதம் 6-ம் திகதி வல்வெட்டித்துறையில் வைத்து செல்லக்கதிரமலை சூரியசேகரம் என்பவரைத் தாக்கியதென்ற குற்றச்சாட்டின் பேரில்நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த டீ சூசா (பிறைவேற்) என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் ஆஜரான போது மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்தமாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பொகவந்தலாவை ஆலய உற்சவம்

பொகவந்தலாவை. புதன்

பொகவந்தலாவை கொட்டியா கொல்லை பஜாரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் உற்சவ விழா நாளை நடைபெறும்.

கடந்த வருடத்தைவிட சிறப்பான முறையில் விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாற்பத்தையாயிரம் ரூபாய் செலவில் அண்மையில் கோவில் முன்றலில் ஒரு சிற்பக் கோபுரம் அமைக்கப்பெற்று பெருவிழா வொன்றும் கொண்டாடப்பட்டது.

## சாகித்திய மண்டல பரிசு பெற்றனர்

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் செந்தமிழ் இலக்கியக் குழுவினரால் நடாத்தப்பட்ட 1968-ம் ஆண்டு செந்தமிழ் இலக்கிய இரசனைக்கான போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:

முதலாம்பரிசு(ரூபா 100) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவரான செல்வன் சின்னத்துரை சுதந்திரராஜா.

இரண்டாம் பரிசு (ரூபா 75-00) மாத்தளை பாக்கிய வித்தியாலய மாணவி செல்வி தனலஷ்மி பொன்னையா.

மூன்றும் பரிசு (ரூபா 50-00) முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவரான செல்வன் இ. தெய்வேந்திரம் பிள்ளை.

இப்பரிசுகள் இம்மாதம் 24-ம் திகதி வவனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். சாகித்திய மண்டல தமிழ் இலக்கிய விழாவில் வழங்கப்படும்.

## 23 பேருக்கு 7 பேர்தான் ஆனுல் வேலைகள் தாமதம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்திலுள்ள இன்சூரன்ஸ் கூட்டு ஸ்தாபனத்தில்மிகத் தாமதமாகவே இப்போது வேலைகள் நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் இங்கு ஊழியர்கள் பற்றுக்குறை என்று கூறப்படுகின்றது.

இவ்வருட ஆரம்பத்தில் இங்கிருந்து 23 ஊழியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதற்குப் பதிலாக 7 ஊழியர்கள் மட்டும் இங்கு வந்ததே இதற்குக் காரணமாக இருக்கின்றது.

ஊழியர் பற்றுக் குறை பற்றி இங்குள்ள அதிகாரிகள் தலைமை அலுவலக அதிகாரிகளுக்கு தெரிவித்த போது இவர்களுடனேயே வேலைகளைக் கவனிக்குமாறு தலைமை அதிகாரிகள் அறிவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

## 25 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி பாறி, கிருஷ்ணபிள்ளை வள்ளியம்மை ஆகியோர் அரசாங்க முத்திரை பொறிக்கப்படாத தராசுப்படிகளைப் பாவித்தகுற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவால் தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## தட்டுப்பாடு நீங்கியது

அல்லைப்பிட்டி, புதன்

வேலணைக் கிராமசபையினரால் நடாத்தப்படும் சித்த ஆயுள்வேத வைத்திய சாலையில் நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளதாக மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆயுள்வேத வைத்தியர் திரு. ஆர். முருகவேள் தெரிவித்துள்ளார்.

## ஆட்சிம
## பிரதம

கொழும்பு, செவ்
ஆட்சிமன்றத்தின்
றைய நிகழ்ச்சி நிர
'திடீர்த் தேயிலை' வி
இடம் பெற்றிருந்தத
என்னவோ இன்று
திடீர் என சில சம்பவ
நடைபெற்றன.

நிகழ்ச்சி ஆரம்
லேயே திரு. பீலிக்ஸ்
பண்டாரநாயக்கா, ஐ
முதல் திகதிவரை
வண்டிகளில் உணவுக்
களை ஏற்று நடத்திய
கே. எட்மண்ட் என்ப
மிருந்து ஒரு புகார் ம
சபையில் வாசித்து,
ரிக்க முயன்றபோது,
ங்க அமைச்சர் திரு
ஆர். ஜயவர்த்தன
கிட்டு, முன்னறிவித்த
வுமின்றி இப்படியான
மனுக்
சபையி
க்க இடமில்லை என்று
குப் பிரச்னை எழுப்ப,
ற்கு சட்டத்தில் இட
கிறதா இல்லையா என்
நிரூபிக்கவும், விளக்
ஒவ்வொரு தரப்பி
ஆட்சிமன்ற நடை
விதிகளிலிருந்து மேற்
காட்டி விவாதிக்க -
யாக சபை விவாதம்
பிடிக்க ஆரம்பித்துவிட்
இறுதியில் யூ. கே. எ
டின் புகார் மனுவை
யில் சமர்ப்பிக்க அ
கோரி திரு. பீலிக்ஸ்
பண்டாரநாயக்கா கெ
வந்த பிரேரணை
பான்மை வாக்கு
தோற்கடிக்கப்பட்ட
தான் சபையில் அமை
பட்டது,

அடுத்து கேள்வி
தின்போ ,
நிலைய அதிபர்களின்
ங்கள் பற்றிய கேள்வி
றிற்குப் பதிலளித்த
ங்கக் கட்டுவேலை,
போக்குவரத்து அமை
ஆட்சிமன்றக் காரி
திரு. விஜயபால மெ
''அரசியல் காரண
காக உப-தபால் நிலை
பர்களை நியமிக்கும் வ
இந்த அரசாங்கத்
(தேசிய அரசாங்கத்
இல்லை. வேண்டு
பழைய அரசாங்க
இருக்கலாம் என்று
லாகக்கூறிவிட்டு, அத்
நிற்காமல் 'குதிரை
றத் தள்ளியதோடு
பறித்ததாம்' என்ற
யாக ''பின்புற வ
உப-தபால் நிலைய
கள் நியமிக்கப்பட
அப்படி நியமனம்
தைப்பற்றி தம்புள்ள
பி. (திரு. ரி. பி. தெ
கோன்) யைக் கே
தெரியும்'' என்று வ
பழத்தில் ஊசி ஏற்
போல சொல்லிவிட்
ரவே, கொதித்தெழு
தம்புள்ள எம். பி. தி
பி. தென்னக்கோன்.

திரு. ரி. பி. தெ
கோன் தபால் அமை
ஆட்சிமன்றக் காரி
யாக இருந்தபோது அ
மகன் ஒருவருக்கு உப
நிலைய அதிபர் பதவி
க்கப்பட்டதைத்தான்
படி 'முறைகெட்டதன
திரு. விஜயபால மெ
குத்திக்காட்டுகிறுர்
கொதித்தெழுந்த திரு
தென்னக்கோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் அறிவையும் ன்ஞல் முடியாது’
## ஆட்சிமன்றத்தில் ஆர். ஜி.க்கு பிரதமர் கொடுத்த சாட்டை

கொழும்பு, செவ்வாய் ட்சிமன்றத்தின் இன் நிகழ்ச்சி நிரலிலே த் தேயிலை’ விஷயம் பெற்றிருந்ததனுலோ வோ இன்று திடீர், என சில சம்பவங்கள் பெற்றன.

கழ்ச்சி ஆரம்பத்தி திரு. பீலிக்ஸ் டயஸ் ாரநாயக்கா, ஜனவரி திகதிவரை ரயில் களில் உணவுச்சாலை ற்று நடத்திய யூ. ட்மண்ட் என்பவரிட து ஒரு புகார் மனுவை பில் வாசித்து, பிரே முயன்றபோது, ராஜா மைச்சர் திரு. ஜே. ஜயவர்த்தன குறுக் , முன்னறிவித்தல் எது றி இப்படியான புகார் சபையில் வாசி டமில்லை என்று ஒழுங் ரச்னை எழுப்ப, அத சட்டத்தில் இடமிடுக் இல்லையா என்பதை க்கவும், விளக்கவும் வாடு தரப்பினரும் மன்ற நடைமுறை ளிலிருந்து மேற்கோள் விவாதிக்க - இப்படி சபை விவாதம் சூடு க ஆரம்பித்துவிட்டது. யில் யூ. கே. எட்மண் புகார் மனுவை சபை சமர்ப்பிக்க அனுமதி திரு. பீலிக்ஸ் டயஸ் ாரநாயக்கா கொண்டு பிரேரணை பெரும் மை வாக்குகளால் கடிக்கப்பட்ட வுடன் சபையில் அமைதி ஏற் து,

டுத்து கேள்வி நேரத் தபால் அதிபர்களின் நியமன பற்றிய கேள்வியொன் ப் பதிலளித்த அரசா கட்டுவேலை, தந்திப் குவரத்து அமைச்சின் மன்றக் காரியதரிசி விஜயபால மெண்டிஸ் சியல் காரணங்களுக் உப-தபால் நிலைய அதி ள நியமிக்கும் வழக்கம் அரசாங்கத்துக்கு ய அரசாங்கத்துக்கு) . வேண்டுமானுல் ய அரசாங்கத்துக்கு கலாம் என்று குத்த க்கூறிவிட்டு, அத்தோடு மல் ‘குதிரை குப்பு ள்ளியதோடு குழியும் ததாம்’ என்ற கதை ‘‘பின்புற வழியாக தபால் நிலைய அதிபர் நியமிக்கப்படவில்லை, டி நியமனம் பெறுவ பற்றி தம்புள்ள எம். திரு. ரி. பி. தென்னக் ன்) யைக் கேட்டால் யும்’’ என்று வாழைப் தில் ஊசி ஏற்றினுற் ல சொல்லிவிட்டு அம கொதித்தெழுந்தார் ள்ள எம். பி. திரு. ரி. தென்னக்கோன்.

திரு. ரி. பி. தென்னக் ன் தபால் அமைச்சின் மன்றக் காரியதரிசி இருந்தபோது அவரது ஒருவருக்கு உபதபால் அதிபர் பதவி கொடு பட்டதைத்தான் இப் முறைகெட்டதனமாக’ விஜயபால மெண்டிஸ் க்காட்டுகிருர் என்று தித்தெழுந்த திரு. பி. னக்கோன், தன்னை அவமானப்படுத்தும் குறிப்பு சம்பந்தமாக தானும் தனிப்பட்ட முறையில் விளக்கம் தெரிவிக் கப்போவதாகக் கூறினுர்.

### மகனுக்கு அப்பா வழங்கிய நற்சான்று

சபாநாயகர் எவ்வளவோ கட்டுப்படுத்தியும் அடங்காமல், அவரது அனுமதிக்குக் கூடக் காத்திராமல் படபட வென்று பொரிந்து தள்ளினுர்.

‘‘எனது மகன் சப்-போஸ்ட்மாஸ்டராக மட்டுமல்ல, போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகக்கூட தகுதியும் திறமையும் படைத்தவன்’’ என்று அவரது மகனுக்கு அவரே நற்சான்றிதழ் வழங்கிவிட்டு, அவரது மகனுக்கு தேசீய அரசாங்கத்தினுல் பலவிதமான கொடுமைகள் இழைக்கப்பட்டதா

நமது சபை நிருபர்

கவும், அரசாங்க வேலையிலிருந்தே விலகவேண்டிய அளவுக்கு அவரது மகனை இந்த அரசாங்கம் கஷ்டப்படுத்தியதாகவும் குற்றம்சாட்டினுர். ஆசிரியை வேலை பார்க்கும் அவரது இன்னெரு மகளுக்கும் தேசீய அரசாங்கம் பல விதங்களில் முட்டுக்கட்டைகள் போட்டு வருவதாகவும் ஆத்திரத்துடன் விளாசித் தள்ளிவிட்டு ‘‘எனது மகனே எனது மகளோ, அல்லது எனது அப்பனே, பாட்டனே, எனதுபரம்பரையோ இதுவரையிலும் அரசாங்கத்தையோ - அரசாங்க உத்தியோகத்தையோ நம்பி வாழ்ந்ததே கிடையாது! இனியும் வாழமாட்டோம்;’’ என்று தன் தன்மான உணர்ச்சியை உச்சஸ்தாயியில் சபையினருக்குத் தெரிவித்துவிட்டுத்தான் அமர்ந்தார் திரு. ரி. பி. தென்னக்கோன்.

### திடீர் தேயிலை விவாதம்

ஆரம்ப சூடெல்லாம் தணிந்த பின்னர் ‘திடீர் தேயிலை, மீதான ஏற்றுமதி விலையை ரத்துச் செய்யும் நிதிமந்திரியின் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எந்த விஷயத்தைப் பற்றியும் மணிக்கணக்கில் சலிக்காமல் பேசித்தள்ளக்கூடிய நாவண்மை படைத்த திவிலுப்பிட்டிய எம். பி. திரு. லக்ஷ்மன் ராஜபக்ஸ திடீர் தேயிலை பற்றியும், அதன் மீதான ஏற்றுமதித் தீர்வையை ரத்துச் செய்வதால் ஏற்படக்கூடிய பலாபலன்களையும் சாதக, பாதகங்களையும் பற்றி மூன்று மணித்தியாலம் பேசித் தீர்த்த பின்னர் இத்துடன் எனது சிறு சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன் என்று சொன்னபோது ‘‘என்ன ‘சிறு’ சொற்பொழிவா?’’ என்று நிதியமைச்சர் கேட்டுவிட்டுச் சிரித்தார்.

இவரைத் தொடர்ந்து வலப்பனை எம். பி. திரு. டி. பி. எம். ஹேரத்தும் ‘திடீர் தேயிலை’ பற்றிய புராணத்தை ஆரம்பித்தபோது சில சைவக் கடைகளில் கொடுக்கப்படும் சூடு ஆறிப்போன தேநீரை குடிக்கவும் பிரியமில்லாமல் கொட்டவும் மனமில்லாமல்குடித்துமுடிப்பது போல் ‘சிவனே’ என்று கேட்டுக் கொண்டிருக்க நேர்ந்தது.

களைத்துப்போயிருக்கும் போதுசூடாக ஒரு கப்ஸ்ட்ராங்டீ குடித்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது. இவரைத்தொடர்ந்துபேசிய திரு. பெர்னுட் சொய்சாவின் பேச்சு. ‘தேயிலைத் தொழிலை வெகுவாகப் பாதித்துள்ள காரணங்களுக்குப் பரிகாரமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இதுவரை எந்த அரசாங்கமுமே எடுக்கத் தவறிவிட்டதைச் சுட்டிக் காட்டிவிட்டு தேசிய அரசாங்கம் தான் மற்ற எல்லா அரசாங்கங்களையும்விட இந்த விஷயத்தில் மிதமாக இருந்த பழிக்கு ஆளாகிறது என்று குற்றம் சுமத்திஞர் திரு. பெர்னுட்.

தேயிலை விலை இறக்கத்திஞல் தேயிலைத் தொழில் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றதென்றும், உலகமெங்கும் உள்ள தேயிலை உற்பத்தி நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தேயிலையின் விலையை வேண்டுமென்றே குறைத்துவைக்க முயலும் புது காலனி ஆதிக்க ஏகாதிபத்திய சக்தியை முறியடிக்கப் போராடினுல்தான் தேயிலைத் தொழிலுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று முழங்கிய திரு. பெர்னுட், நாசூக்காக சர்வதேச பொருளாதார அபிவிருத்தி மகாநாடுகளிலே எல்லாம் ஏகாதிபத்தியவாதிகளைத்தான் இந்த அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் ஆதரிக்கின்றனர் என்று கூறத் தவறவில்லை.

### யாருக்காகப் பிச்சை

இவரைத்தொடர்ந்துதிரு. ஷெல்டன் ஜயசிங்கா பேசிய பொழுது, எதிர்க்கட்சியினரின் கண்டனங்களுக்கு கொஞ்சம் கீழிறங்கி வந்தே பதிலளித்துப் பேசினுர். ‘‘எங்கள் அமைச்சர்கள் நிதி உதவி கேட்டு உலகெங்கும் பிச்சை கேட்கிருர்கள் என்று கேலிபேசுகிறீர்களே. நாங்கள்யாருக்காகப்பிச்சை எடுக்கிருேம்? ஏன் பிச்சை கேட்கிருேம்?’’ என்று உணர்ந்தீர்கள் என்று கேட்டுவிட்டு, ‘நாட்டுக்காகத்தான் நாங்கள் பிச்சை கேட்கிருேம்: எங்கள் பொருளாதாரத்தை நீங்கள் நாசமாக்கிவிட்டுப் போனீர்கள்? அதனுல்தான் பிச்சை எடுக்கிருேம்’’ என்று கேட்டு, எதிர்க்கட்சியினரை மடக்க முயன்ருர்.

### வாக்காளர் பட்டியல்

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது திரு. ஆர். ஜி. சேனநாயகா [illegible]

டட்லி சேனநாயகா பின்னர் குறிப்பிட்டதைப் போன்று ‘வழக்கம்போல கள்ளத்தோணிகளைச் சுட்டிக்காட்டி, அரசியலைப் பின்னிப் பிணைத்து அடுத்த பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பில் இந்திய வம்சாவழியினர் திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் வியாக்கியானப்படி ’எல்லோருமே கள்ளத் தோணிகள்’— பல நூற்றுக் கணக்கான பேர் இடம் பெற்றிருக்கிருர்கள் என்றும் அண்மையில் நடந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் வாக்காளர் இடாப்பினைப் பூரணமாகப் பரிசோதனை செய்துபார்க்கக் கால அவகாசம் போதாதென்றுகூறி, காலஎல்லையை நீடிக்குமாறு கேட்டார்.

சட்டப்படி காலஎல்லையை நீடிக்க இடமில்லை என்று பதில் சொன்ன திரு. டட்லி சேனநாயகா, ‘உண்மையில் நியாயம்வழங்கப்படவில்லை’ பெயர்கள் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை என்று குற்றம் சுமத்தவேண்டியவர்கள் இந்திய வம்சாவழியினர் தான் என்று சொல்விட்டு விகிதாசாரப்படி இந்தியர்களின் பெயர்கள் தான் குறையாகப் பதிவாகியிருப்தாகக் கூறி ‘நான் சொன்னதெல்லாம் விளங்கியதா?’ என்று திரு. ஆர். ஜி. சேனநாயகாவைக் கேட்க ‘அவர் விளங்கவில்லை’ என்று சொல்லவே ‘உனக்கு விளங்கிக்கொள்ளும் அறிவையும் தெரிந்துகொள்ள முடியாது’ என்று ஒரேயடியாக மட்டம் தட்டினுர் பிரதமர்!

# ‘உள்ளூராட்சி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு கூடாது’

கோப்பாய், புதன்

‘‘எந்தவொரு உள்ளூராட்சி நிர்வாகத்திலும் அரசியல் தலையீடு அறவே கூடாது. அது கிராமத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும் தன்மையுடையது. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு காங்கிரஸ்கட்சி ஆதரவாளனுகஇருப்பினும்கிராம சபைத் தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிடவில்லை. தலைவர் தேர்தலிலும் கட்சி வேறுபாடற்றவனுகவே நடந்துகொண்டேன். இனியும் அவ்வாறே நடப்பேன் என உறுதி கூறுகின்றேன். அது மாத்திரமன்றி தலைவர் தேர்தலில் என்னைத் தேர்ந்தெடுக்க வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் தமிழரசு வாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது’’

இவ்வாறு கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலைய முன்றலில் தமக்கு அளிக்கப்பட்டவரவேற்புபசார விழாவில் பேசுகையில் கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. ரி. பரமானந்தராசா கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், ‘‘அடுத்து வரும் நாலாண்டு காலத்தில் இக்கிராமத்தின் சுகாதாரம், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதி, ஏழைக் குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் ஆகியவற்றில் உள்ள சீர்கேடுகளை நீக்குவதற்கு வட்டார பேதம், சாதி, சமய, சமூகபேதம் இன்றி ஆவன செய்ய முன்வருவேன் அதற்குத் தேவையானஒத்துழைப்பை பொதுமக்களிடமிருந்தும், எனது சக அங்கத்தவர்கள் மூலமாகவும் கோருகிறேன் எனவும் கேட்டுக் கொண்டார்.

திரு. கே. வைரவநாதன் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற விழாவில் மேற்படி கிராமசபையின் அங்கத்தவர்களும், மற்றும்பலரும் பேசினர்.

திரு.வி. தியாகராஜாவின் இன்னிசையும் நடைபெற்றது.

## கோப்பாய் பகுதியில் குடும்பக்கட்டுப்பாடு வெற்றிதந்துள்ளதாக பாராட்டு

புத்தூர், புதன்

குடும்பக் கட்டுப்பாட்டு வைத்தியத்தில் சத்திர சிகிச்சையற்ற முறை கோப்பாய் பகுதியில் கூடிய வெற்றியைக் கொடுத்துள்ளது.

இங்கு விஜயம் செய்த அமெரிக்க டாக்டரான திரு. உரைட் இவ்வாறு தெரிவித்தார்.

பல பிரச்னைகளையும் குழந்தைகளும், வாலிபர்களும் எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் குடும்பக்கட்டுப்பாடு மிக முக்கியமெனக் குறிப்பிட்ட டாக்டர் உரைட் இதற்குச் சத்திர சிகிச்சையற்ற முறை மிக இலகுவானதும், சுகமானதும் கூட’ என்றும் சொன்ஞர்.

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த இவர், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு ஆஸ்பத்திரி டாக்டர் ஆற்றும் சேவைக்குப் பராட்டுத் தெரிவித்தார்.

## இன்று பாராட்டு விழா

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய துணை அதிபர் திரு. ச. கணபதிப்பிள்ளை 38 வருடகால சேவையின் பின் இன்று ஓய்வுபெறுவதை முன்னிட்டு அன்னாரது சேவையைப் பாராட்டி இன்று பிரிவுபசார விழா ஒன்று நடைபெறுகிறது. மேற்படி மகாவித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் வே. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழா முடிவில் விருந்துபசாரமும் நடைபெறும். ஆசிரிய, மாணவர்கள் சார்பில் வாழ்த்துப்பா ஒன்றும் வாசித்தளிக்கப்படவிருக்கிறது.

## பிரிவுபசாரம்

விசுவமடு, புதன்

விசுவமடு விவசாயப்படை முகாமில் 8 மாத காலமாக லிகிதராகக் கடமையாற்றிய கே. புவனேந்திரம் இம்மாதம் ஒட்டிசுட்டான் முகாமிற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளதை முன்னிட்டு முகாம் பொறுப்பதிகாரி திரு. சி. கணேசன் தலைமையில் ஒரு பிரிவுபசாரம் நடைபெற்றது. அன்னரின் சேவையைப் பாராட்டி சக லிகிதர் அ. சிவஞானசுந்தரம், முகாம் பரிபாலகர் டி. பி. இம்மானுவல், முகாம் உத்தியோகஸ்தர்கள் இப்பிரகாம் லெப்பை, கதிரவேலு, இராசையா உட்பட பலர் பேசினர்.

முகாம் ஊழியர்கள் ஒன்று சேர்ந்துஅவருக்கு ரூ. 250/- பெறுமதியான பரிசில்களை அன்பளிப்பாக வழங்கினர்.

## அமைச்சரின் கோப்பாய் விஜயம்

கோப்பாய், புதன்

இம்மாதம் 28-ம் திகதி யாழ் விஜயம் செய்யும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, கோப்பாய் பிரதிநிதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் அழைப்பின் பேரில் கோப்பாய்க்கும் விஜயம் செய்யவுள்ளார்.

கோப்பாய் எம். பி. யின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் அமைச்சர் கோப்பாய்கிராமசபை அங்கத்தவர்களையும் சந்திக்கவிருக்கிருர்.

விலைக்கட்டுப்பாட்டுக்கு

## மந்திரிசபை உபகமிட்டி

பம்பலப்பிட்டி, புதன்

உள்ளூர் கைத்தொழில் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்தன வர்த்தக மந்திரி திரு. பெர்னுண்டோ ஆகியோர்களைக் கொண்ட மந்திரிசபை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பிரதமர் தலைமையில் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் தொழில் உதவி அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஜெயசிங்க கொண்டு வந்த தீர்மானமொன்றைத் தொடர்ந்தே இக்குழு நியமிக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன்னர் உற்பத்திப் பொருள்கள் குறைவானதால் பிரச்னை ஏற்பட்டதெனவும் இப்பொழுது விலைகள் கூடியதால் பிரச்னை எழுகிறதெனவும் கூறி இந்த விலைக்கட்டுப்பாடு பிரச்னை மிகக் கவனமாக கவனிக்கப்பட வேண்டியதென்றெனவும் பிரதமர் பேசுகையில் குறிப்பிடடார். சில ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் தேவையற்ற இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளமையைச் சுட்டிக் காட்டினர்.

## அமைச்சருக்கு மகஜர்

வெள்ளவத்தை, புதன்

தெஹிவளையில் திட்டமிடப்பட்டுள்ள கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் தமிழையும் போதனுமொழியாக்கி அங்கு வர்த்தகவியல், தொழில் நுட்ப போதனையினங்களையும் நுண்கலைப் பகுதியையும் ஆரம்பிக்கும்படி கோரும் மகஜர் ஒன்றை இப்பகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் கையெழுத்திட்டு கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர். மருதானையிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலும் கூட தமிழ் போதனுமொழி விஷயம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் கீலக வருடம் தை மாதம் 18ஆம் திகதி (31-1-69) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-15 முதல் 10-45க்குள் வரும் சுபநேரத்தில்

எங்கள் புதல்வி திருநிறை செல்வி

**சாந்தாவுக்கும்**

பதுளை செ. சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் புதல்வன்

**சந்திரசேகரனுக்கும்**

கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தில் திருமணம் நடைபெறுவதால் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை அன்பு அழைப்பாக ஏற்று திருமண வைபவத்தில் கலந்துகொண்டு தம்பதிகளை வாழ்த்தியருள வேண்டுகின்ருேம்.

ஜகஜோதி கம்பெனி,
14, திருகோணமலைவீதி,
கண்டி.

தங்கள் அன்புள்ள
ரா. மு. நாகலிங்கம் தம்பதிகள்

1162


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் சிலை திறப்பு வைபவம்

பம்பலப்பிட்டி, புதன்

நாவலர் பெருமானின் உருவச்சிலை திறப்பு வைபவத்தையொட்டி நடைபெறவிருக்கும் தமிழ் விழாவில் புத்தகக் காட்சியும் நாவலர் மலர் வெளியீடும் சிறப்பு அம்சங்களாக இடம் பெற இருக்கின்றன. இதற்கான தயாரிப்பு வேலைகளை செய்வதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஆட்சிக் குழு உபகுழுக்களை நியமித்திருக்கின்றது.

புத்தகக் காட்சியில் ஆறுமுகநாவலர் எழுதிம நூல்கள், பதிப்பித்த நூல்கள் அவரைப்பற்றி பிற அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்கள் அவர் நினைவாக அவ்வப்போது வெளியிடப்பட்ட மலர்கள், சிறப்பிதழ்கள் முதலியவற்றுடன் நாவலரவர்கள் உபயோகித்த பல பொருட்களையும் சேகரித்து பொதுமக்களின் தரிசனைக்காக வைக்கப்படும்.

புத்தகக்காட்சி அமைப்பு உபகுழுவுக்கு திருவாளர்கள் எஸ். அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் வைத்தீஸ்வர வித்தியாலயம்) பெ. கணநாதபிள்ளை (கல்வித் திணைக்கள பாடநூற்சபை) க. மாணிக்கவாசகர் (யாழ்ப்பாணம் பொது நூலகம்) பண்டிதர் அ, பஞ்சாட்சரம் (உடும்பராய்) க. சொக்கலிங்கம் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோர் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

## ஆசிரியர் இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

பண்டாரவளை அர்ச். ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் திரு. என். நவரத்தினம். திரு. எஸ். செல்லத்துரை ஆகியோர் வதிரி திரு இருதயக் கல்லூரிக்கு இம்மாதம் மாற்றப் பட்டுள்ளனர். வதிரி திரு இருதயக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். இராஜநாயகம் யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

பண்டாரவளை சென். மேரிஸ் மகா வித்தியாலய ஆசிரியர் திரு. வே. சதாசிவமும், திருமதி வி. சதாசிவம் பொன்னம்மாவும் மன்னார் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## கோரிக்கை

கோப்பாய், புதன்

கோப்பாயிலுள்ள இந்து மத்திய கலவன் பாடசாலைக்கு நாவலர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையென பெயரிடப் படவேண்டும் என்னும் கோரிக்கை மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தாராலும் பழைய மாணவர் சங்கத்தாராலும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மூலமாக கல்வி இலாகாவுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் ஆங்கில மொழியின் தரம் மிகவும் குறைவாகவுள்ளதால் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களையும் நியமித்தல் வேண்டும் எனவும் மேற்படி கோரிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

## 'நுட்பம்'

அளவெட்டி, புதன்

கட்டுப்பெத்தை இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கல்லூரி மாணவர்கள் தமது முதலாவது ஆண்டு விசேட மலரை வெளியிட்டுள்ளனர்.

இரு, ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட இக்கலாசாலையின் வரலாறுகளை 'நுட்பம்' என்ற இம்மலர் சித்தரிக்கிறது.

## பிரிவுபசார

அளவெட்டி, புதன்

தெல்லிப்பளை கிழக்கு கிராமசேவையாளராகக் கடமையாற்றிவந்த திரு. செ. நடராசா அளவெட்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையொட்டி தெல்லிப்பளை மக்களால் ஒரு பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது.

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசாரவிழாவில் வலி-வடக்குக் காரியாதிகாரி பி. எல். பற்றிக்ஸ் உட்பட மற்றும்பலர் பாராட்டுரை வழங்கினர்.

## துணை ஆயருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா

கச்சாய் சம்பேதாறு சம்பாவிலு கோவிலுக்கு, யாழ்ப்பாண மேற்றிராசனத் துணை ஆண்டகை ஆயரான மகா வந். லீ. இ. அன்ரனி ஆண்டகை விஜயம் செய்த போது அன்னாருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அப்பகுதி கிறிஸ்தவர்கள் அளித்த இவ் வரவேற்பில் இந்து சமயத்தவர்களும் கலந்துகொண்டனர்.

## புகார்

சித்தங்கேணி, புதன்

கடந்த சில இரவுகளில் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு கல்வீச்சும், வெடி கொழுத்தி எறிதலும் நடைபெறுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனம் சித்தங்கேணிச் சந்தியில் இருக்கிறது. உரிமையாளர் இச்சம்பவம்பற்றிச் சங்கானை மேற்கு கிராம சேவையாளரிடம் புகார் தெரிவித்தபின் சங்கானைப் பொலிசாரிடமும் முறையிட்டுள்ளார்.

## 'பிஸ்கட்' இல்லை

சித்தங்கேணி, புதன்

வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் கல்விப்பகுதியினரால் இலவசமாக வழங்கப்படும் மதியபோசனமான பிஸ்கட் வழங்கப்படுவதில்லையாம்.

## முத்திரைக் கண்காட்சி

### 27-ல் 'ஹோப்பில்' இடம்பெறும்

வெள்ளவத்தை, புதன்

இலங்கை தபால் முத்திரைச் சங்கத்தினர் இதுவரையும் வெளியிட்ட புதிய தபால்தலைகளின் கண்காட்சி ஒன்று இம்மாதம் 27-ம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் உள்ள அமெரிக்க 'ஹோப்' கப்பலில் நடைபெறவிருக்கிறது.

இக் கண்காட்சி நடைபெறும் அதே சமயத்தில் புதிய தபால் முத்திரைகளின் விற்பனையும் இடம் பெறும். இதற்... ஏற்பாடுகளையும் கொழும்பு சிலின்கோ ஹவுஸில் உள்ள இலங்கை தபால் முத்திரைச் சங்கத்தினர் செய்துவருகின்றனர்.

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை யாழ்ப்பாணம் பஸ் சேவையில்பல இடையூறுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றனவாம். திருக்கோணமலையிலிருந்து குறுக்குப் பாதையில் ஹொரோப்பத்தானை ஊடாக சென்றுவந்த பஸ் வண்டி தற்போது மிகிந்தலை ஊடாகவே செல்கின்றது. இதற்கு காரணம் ஹொரோப்பத்தானை வீதி பழுதடைந்திருப்பதேயாகும் எனத் தெரிகிறது. இதனால் 15 மைல்களுக்குஅதிகமான தூரத்தைக் கடக்க வேண்டியும் கூடுதலான பணம் கொடுக்க வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

வியாழக்கிழமை

(23-1-69)

தை மாதம், 10 உ

திதி- ஷஷ்டி இரவு 5-09 மேல் சப்தமி.

நட்சத்திரம்- உத்தரட்டாதி இரவு 6-31 மேல் ரேவதி.

ராகுகாலம்- 12-05 — 3-35.

சுபநேரம்- 8-05 — 9-35.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு பொன்னான ஆண்டு ஆகும். குடும்பத்தில் கொண்டாட்டம். உத்தியோகத்தர்களுக்கு உயர்வு. பெண்கள் வாழ்வில் பெருமகிழ்ச்சி வணிகத்துறையில் வளமான முன்னேற்றம். யந்திர வளர்ச்சி குன்றுது. விருந்தினர் வரவு, வெற்றிக்குரிய ஆண்டுமாகும்.

மேஷம்- வெள்ளிப் பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.

ரிஷபம்- மோசடி நடக்கும், விளிப்புடன் இரு.

மிதுனம்- நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

கடகம்- அறவழிநாட்டம், தாராளமனம்.

சிம்மம்- கழுகுப் பார்வை, கவலையின்தாக்குதல்.

கன்னி- களஸ்திரசுகம், கண்ணியம் சேரும்.

துலாம்-வார்த்தையால் அனர்த்தம், ஊமையாகிவிடு.

விருச்சிகம்- பிதாவழிப் பொருள், பெருமையும் உண்டு.

தனுசு- முயற்சிவெல்லும், மூதல் இடம் உண்டு.

மகரம்- பிள்ளைப்பாசம், கொள்ளை இன்பம்.

கும்பம்- வேண்டாத நட்பால், விபரீதம் விளையும்.

மீனம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் உண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 23—1—69

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344மீ அன் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 குதூகலம், 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

## 38 வருடஆசிரிய சேவையின் பின் ஒய்வுபெறும் துணைஅதிபர்

அனலைதீவு சதாசிவ ஆங்கில மகாவித்தியாலய துணை அதிபர் திரு.எஸ். கணபதிப்பிள்ளை ஆசிரியர் தமது 59-வது வயதில் இன்று 23-1-1969-ல் ஓய்வு பெறுகிறார். கடந்த 38 வருடங்களாக ஆசிரியப்பணி புரிந்த இவர் 1931-ல் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். இப்போதுள்ள கட்டிடங்களைப் போல் அல்லாமல் மண் சுவரையும், ஓலைக் கூரையையும் கொண்டதாக இப்பாடசாலையிருந்த காலத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அவ்வப்போதிருந்த முகாமையாளர்களினதும் தலைமையாசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்று வித்தியாசாலையைத் திறம்பட நடாத்த உதவினார்.

தமது சேவைக்காலம் முழுவதையும் பாடசாலையில் அர்ப்பணித்து சக ஆசிரியர்களுடன் முகம் கோணமல், சிரித்த முகத்துடன் சேவையாற்றியவர்.

உருவத்தால் சிறியவராயினும், உள்ளத்தால் பெரியரான எமது துணை அதிபர் ஒய்வு பெறுவது அறிந்து வித்தியாலய மாணவரும், ஆசிரியரும், பெற்றோரும் கலங்குகின்றனர். காலை 8 மணியானதும் ஒரு முழப் பிரம்புடன் பாடசாலை வாசலில் நிற்கும் துணை அதிபர் திரு, கணபதிப்பிள்ளையை இனிமேல் பாடசாலையில் காணமாட்டோமா எனத் திகைக்கின்றனர்.

''நெடுந்தீவு உடையார் பேரன்'' என இவ்வூர் மக்களால் புகழ்ந்து கூறப்படும் இவர், காலஞ்சென்ற குமாரசாமிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரராவர். சமூகசேவைக்கு தம்மை அர்ப்பணித்த இவரது தந்தையாரைப் போன்று, இவரும் பிறவூர்களிலிருந்து இவ்வித்தியாசாலையில் கடமையாற்ற வரும் ஆசிரியர்களுக்கு முதல் உதவிசெய்வதில் விருப்பமுடையவர். மாற்றலாகி வரும் ஆசிரியர்களும் முதலில் இவரை சந்தித்துக் கொள்ளும் வழக்கமுடையவர்கள்.

இவரது துணைவியார் திருமதி சாமளவல்லியும் இவ் வித்தியாலயத்தில் 13 வருடங்களுக்குமேலாக ஆசிரியையாகக் கடமையாற்றி வந்த காலத்தில் மக்கட் செல்வமும், பொருட் செல்வமும் ஒருங்கே அமைந்திருந்த காலத்தில் வேறோர் ஆசிரியருக்கு இப்பாடசாலையில் இடமளிப்பதற்காக 1946-ம் ஆண்டு தம் மனைவியார் ஆசிரியை பதவியிலிருந்தும் நீங்குவதற்கு சம்மதம்கொடுத்துமற்றைய ஆசிரியருக்கு இடம் கொடுத்த பெருமையும் திரு. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களையே சாரும்.

சண்டைசச்சரவுநடப்பதை விரும்பாத இவ் ஆசிரியர் தனது மாணுக்கர்களுக்கும் சமாதானம்பற்றி அடிக்கடி கூறி சண்டை செய்யும் மாணவர்களையும் பாடசாலையில் கிண்டல் பண்ணிக் கொள்ளுவார். 'சோலி'-சுரட்டு' இல்லாத பெருமகன் என்ற புகழ்ச்சியையும் இவ்வூர் மக்களிடமிருந்து தட்டிக் கொண்டார்.

இவ்வித்தியாலயத்தில்தற்போது பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் இவரது மாணுக்கர்கள். நானும் அவர்களுள் ஒருவன். டாக்டர்களாகவும் என்ஜினியர்களாகவும் பட்டம்பெற்று வந்துள்ள பல மாணவர்களின் பெற்றோருக்குமே இவர் குருவாகவிருந்தார். தனது மாணுக்கர்கள் என்ற பேதம் காட்டாமல், சக ஆசிரியர்களுடன் பழகிக் கொள்ளும் துணை அதிபரின் சேவை, வித்தியாலயத்தின் வளர்ச்சியில் இலைமறைகாயாய் இருந்துள்ளது:

வித்தியாலயத்தின் வளர்ச்சியில் ஆரம்பத்திலிருந்தே பங்கு கொண்டிருந்த நமது ஆசிரியர் பல்லாண்டு காலம் வாழ இறைவனை இறைஞ்சுவோமாக.

க. சிவனடியான்
உதவி ஆசிரியர்,
சதாசிவ மகாவித்தியாலயம்
அனலைதீவு.

0 0

## ஓய்வுபெறுகிறார்

வெள்ளவத்தை, புதன்

கொழும்பு இராணி வீதியிலுள்ள பிரதம தபாற்கந்தோரில் கணக்குக்கிளை, முத்திரைக்கிளை, ...ாசுக்கணக்கீட்டுக்கிளை ஆகி...னவற்றின் உயர்தர கணக்காளராகக் கடைமையாற்றிய திரு. ஈ. இராஜசிங்கம் இம்மாத முதல் தமது கணக்காளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மேற்படி தபாற்கந்தோரின் சிருப்பர் பகுதிக்கும் இவரே சிரேஷ்ட கணக்காளராகக் கடமையாற்றினார். தற்போது இவரது இடத்திற்கு திரு. கே. துரைராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர்முன்னர் சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் கடமையாற்றினார்.

## இரு கூட்டங்களும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்தில் நாளை நடக்கவிருந்த உணவு உற்பத்திக் கூட்டம், இம்மாதம் 27ந் திகதிக்கும், இம்மாதம் 24ந் திகதி நடக்கவிருந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் 8ந் திகதிக்கும் ஒத்திவைக்கப் பட்டன.

இம்மாதம் 23ந் திகதி கொழும்பில் நடைபெறும் உள்நாட்டு அமைச்சு அதிகாரிகளின் மகாநாடொன்றிற்கு அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் செல்வதாலேயே இக்கூட்டங்கள் பின்போடப்பட்டன. (கா, நி.)

## விபத்து மரணம்

அல்லைப்பிட்டி புதன்

வேலணை கிழக்கைச் சேர்ந்த கதிரவேலு சண்முகராசா என்னும் 48 வயது நபர் தண்ணீர் அள்ளும் போது, வலியேற்பட்டு, கிணற்றில் வீழ்ந்து மரணமானார். மரணவிசாரணையின்போது, இறந்தவருக்கு காக்காய்வலி ஏற்படுவதென்றும், சம்பவம் நடைபெற்ற அன்றும் அவ்வலி ஏற்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. வேலணைப் பகுதி மரணவிசாரணை அதிகாரி, தற்செயலாக ஏற்பட்ட விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

## சகாய பணம் சிங்களத்தில்

அளவெட்டி. புதன்

சிங்களம் தெரியாத தமிழர் ஒருவருக்கு சிங்கள மொழியில் காசோலை கிடைத்துள்ளது.

காசோலை கிடைத்ததும் அதன் விபரத்தை அறிய முடியாது பல கஷ்டங்களுக்குள்ளானார் அந்த நபர்.

புத்தளம் சீமந்துத் தொழிற்சாலையில் அகால மரணமடைந்த காங்கேசன்துறையை அடுத்த மாங்கொல்லையைச் சேர்ந்த திரு. எஸ். சிவஞானத்தின் குடும்பத்துக்கு தொழில் நிறுவனம் அனுப்பிய சகாய காசோலையே தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். வியா. சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திரு. சி. பரம்தில்லைராஜா. தலைவர்: திரு. வ. கந்தசாமி. உப்தலைவர்கள்: திரு. மூ.க.ரத்தினவேப்லுபிள்ளை, திரு ரா. வே. சுப்பையா செட்டியார், திரு. எஸ். சேதுராமலிங்கம் பிள்ளை. செயலாளர்:- செல்வன். இ. மயூரநாதன். உபசெயலாளர்:- செல்வன். ம. செல்வராசா. பொருளாளர்: திரு. சு. செல்வராசா. உப பொருளாளர்: செல்வன். ம. கணேசலிங்கம்.

மேலும் 13 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

குறிப்பிட்ட நாட்களில் வீடுகள் தோறும் சென்று பஜனைகள் செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

அராலி, புதன்

அராலி தெற்கு கனவத்தை சனசமூக சங்கத்தினரின் ஆண்டு விழா நடைபெற்றபோது புதிய நிர்வாக சபை உறுப்பினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- திரு. இ. கந்தமுத்து, உப-தலைவர்:- திரு. வே. நடராசா, காரியதரிசி:- திரு. வை. சொக்கலிங்கம் தனாதிகாரி:- க. சின்னத்துரை, உப-காரியதரிசி:- திரு. சி. செல்வரத்தினம், 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

அளவெட்டி, புதன்

யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின், சமாச கூட்டம் நேற்று யாழ். மத்தியகல்லூரியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. யோசெப் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ஏ. யோசெப் (யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர்), தலைவர்; திரு. வி. சுப்பையா, உபதலைவர்கள்; திரு. க. சதானந்தன், திரு. செல்லையா, திரு. ஏ. மாட்டின், செயலாளர்: திரு. எம். செல்வராசா, உபசெயலாளர்: திரு. எஸ். இராசையா, பொருளாளர்: திருமதி அத்தனாசிரியார், பத்திராதிபர்: பண்டிதர் க. கே. ஆசிநாதன். 5 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், வியா. புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தகூட்டத்தில் கீழ்க்காணுவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள்: வண பிதா. பெனட் கொன்சன்ரைன், டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், திரு. வி. இராசநாயகம், திரு. எஸ். பிரான்சிஸ், திரு. ஏ. அன்ரனி. தலைவர்: திரு. ஆ. ஜேசுதாசன், உப-தலைவர்: திரு. அன்ரன், காரியதரிசி: திரு. செ. ஜெயக்குமார், உப-காரியதரிசி: திரு. பிலிப் மத்தியூஸ், தனாதிகாரி: திரு, ம. சூசைநாதன், விளையாட்டு செயலாளர்: திரு. எஸ். சந்தியாப்பிள்ளை, உப-செயலாளர்: ஏ. றிச்சார்ட்.

# கல்வித்திட்டங்களில் மாற்றம் என்ருல் ஆசிரியர், ஆட்சிமன்ற அங்கீகாரம்வேண்டும்

## தேசிய ஆசிரியர் சங்கக்கோரிக்கை

வல்வெட்டித்துறை, புதன்

கல்வித் திட்டங்களில் மாற்றம் கொண்டுவரமுன்பு ஆசிரியர் சங்கங்களினதும், ஆட்சிமன்றத்தினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் எனவும் பாடசாலை நிர்வாகத்தில் அரசியல் செல்வாக்கு இருத்தல் கூடாது எனவும் கோரு தீர்மானங்கள் தேசிய ஆசிரியசங்கத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் திரு. எஸ். பி. நடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றத் தீர்மானங்கள் வருமாறு;

12 அம்சக் கோரிக்கைகளை பெறுவதற்கு நேரடி நடவடிக்கைகள் உட்பட ஏனைய நடவடிக்கைகளை எடுப்பது.

அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களது நிலைமை வரையறுக்கப்பட வேண்டும்.

பென்சனுக்கு கழிக்கும் விகிதம் மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணை தயாரித்து வெளியிடப்படவேண்டும்.

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களது சம்பளம் அதிகரிக்கும் விடயத்திற்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

சேவைமூப்பு ரீதியில்தான் ஆசிரியர்கள் பயிற்சி நிலையங்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ் பண்டிதர்களுக்கும், சிங்களப் பண்டிதர்கள் போல் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்க நிர்வாகப் பிரவேசப் பரீட்சைக்கு ஆசிரியர்களும் தோற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

போயாவுக்கு முதல்நாள் கருத்தரங்குகள் நடாத்துவது முடியும்வரை தவிர்க்கப்பட வேண்டும். கருத்தரங்குகளுக்கு செல்பவர்களுக்கு பிரயாணச் செலவு கொடுக்கப்பட வேண்டும்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா. பள்ளன்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பொ. பேரின்பநாயகம், உப-தலைவர்: இ. பரநிருபசிங்கம், காரியதரிசி: சி. குணரெத்தினம், உப-காரியதரிசி: பொ. கனகநாயகம்: தனாதிகாரி- வே. சிவசுப்பிரமணியம், பதிவாளர்: வே. சிங்கராசா கணக்குப்பரிசோதகர்: வே.காந்தமூர்த்தி. ஏழு பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.


இப்பொழுது !

குரோமோ

வியாபார உத்தரவாத அடையாளம்

உரம்

112 இரு. பைகளில்

கிடைக்கிறது



கிழ்க்காணும பயிர்களுககு உகநதது.

| | | | | |
|---|---|---|---|---|
| கீரை வகைகள் | கிழங்குப் பயிர்கள் | வாழை | அந்தூரியம் | தென்னை |
| தாழ்ந்த பூமிக் காய்கறிகள், | உருளைக் கிழங்கு | அன்னாசி | பெக்கோனியா | கோப்பி |
| பயறு, அவரை வகைகள் | வெங்காயம் | பொதுப் பூவினங்கள் | புல் முற்றம் | கொக்கோ |
| மிளகாய், தக்காளி | பழ மரங்கள் | ரோஜா பூவினங்கள் | வெற்றிலை | நெல் |
| | நாரத்தை வகைகள் | | புகையிலை | விசேஷ நெற்கலவை |
| | | | விசேஷ சிகரெட் புகையிலை | |

இலங்கை முழுதுமுள்ள ஷெல் ரசாயனப் பொருட் கையிருப்பாளர் எல்லோரிடமும் 112 இரு. பைகளிலும் 5 இரு. பைகளிலும் விற்பனையாகின்றன.

QUALITY GUARANTEED BY SHELL SCIENCE

SHELL

குரோமோ உரம் உபயோகித்து

GRO-MORE அதிக உணவு பயிரிடுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பொலிஸார் தமிழ் படிப்பர்

யாழ்ப்பாணம், வியாழன் வடபகுதியில் கடமையாற்றும் சிங்களப் பொலிஸ் ஊழியர்கள் தமிழ் படிக்க வேண்டியதன் அவசியம் பற்றி அவர்களுக்கு வற்புறுத்திய வடபகுதிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், அவர்களுக்கான விசேஷ தமிழ் வகுப்பொன்றையும் ஆரம்பித்துள்ளார்.

இவ்வருட முற்பகுதியில் யாழ்ப்பாணம் வந்த சுமார் 35 சிங்களப் பொலிஸார் தவிர, மேலும் 25 சிங்களப் பொலிஸார் இம்மாதம் 20ந் திகதி முதல் இங்கு வந்ததைத் தொடர்ந்தே பொலிஸ் சுப்பிரிண்டன் இதனை ஒழுங்கு செய்துள்ளார்.

பொலிஸ் பயிற்சி நிலையத்திலிருந்து வெளியேறி, உடனடியாக இங்கு வந்திருக்கும் 25 பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும் சிங்களம் தவிர்ந்த வேறெந்தப் பாஷையுமே தெரியாதாம்.

வடபகுதியில் கடமையாற்றுகையில், தமிழ் தெரிந்திருக்கவேண்டுமெனவும், தமிழில் முறைப்பாடு செய்பவர்களது புகார்கள் தமிழில் பதியவேண்டியதன் அவசியம் பற்றியும் சிங்களப் பொலிஸார் மத்தியில் பேசுகையில் பொலிஸ் சுப்பிரிண்டன் தெரிவித்தார். அத்துடன் இவர்களுக்காக விசேஷ தமிழ் வகுப்பொன்றும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

புதிய நான்கு சிங்களப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்களும் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்ப் பிரதேசத்தில், தழ்மி மக்கள் மத்தியில் சேவை புரியவேண்டியிருப்பதால், தமிழ் அறிந்திருப்பதன் மூலம் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்குமிடையே நல்லுறவைப் பலப்படுத்திக்கொள்ளத் தமிழ் அறிந்திருப்பது அவசியமென்று திரு. சுந்தரலிங்கம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருக்கிறார். (கா. நி)

ஸ்பிரிட் குடித்து, தீ மூட்டி

# தற்கொலை செய்யமுயன்ற இளைஞர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வியாழன் முதலில் ஸ்பிரிட்டைக் குடித்தாராம்; பின்னர் மிகுதி ஸ்பிரிட்டைத் தனது உடலில் ஊற்றி, தனக்குத் தானே தீமூட்டினாராம் வாலிபர் ஒருவர்.

படுமோசமான எரிகாயங்களுக்குள்ளான, தற்கொலை முயற்சியில் இறங்கியதாகக் கூறப்படும் இந்த வாலிபர் இப்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த இந்த 18 வயது வாலிபரை, அவரது தந்தை படம் பார்க்காதே எனக் கண்டித்ததாகவும் இதன் பின்னரே இவர் ஸ்பிரிட்டைக் குடித்ததோடு தனது உடலுக்கும் தீமூட்டித் தற்கொலை முயற்சியில் இறங்கியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். (கா. நி.)

# வடக்கில் கி. சபைகள் அதிகரிக்கப்படும்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சபைகளின் தொகை அதிகரிக்கப்படலாமென தெரிய வருகின்றது. இம்மாத இறுதியில் இங்கு வரும் உள்ளூராட்சி அமைச்சர், இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இது பற்றி ஆலோசிப்பார் என அறியப்படுகின்றது.

சில கிராம சபைகள் 10க்கும் மேற்பட்ட வட்டாரங்களைக் கொண்டிருப்பதால் இக் கிராம சபைகளில் வட்டாரத் தேவைகளை சரியாகப் பூர்த்தி செய்ய முடியாமலிருப்பதே இதற்குக் காரணம் என உள்ளூராட்சி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர், கோப்பாய், வட்டுக்கோட்டை, புத்தூர் போன்ற கூடிய வட்டாரங்களைக் கொண்ட கிராம சபைகள் பிரிவு செய்யப்படலாமெனத் தெரிய வந்துள்ளது. இதற்கிணங்க யாழ். மாவட்டத்தில் இவ்வருடத்துள் மூன்று புதிய கிராமசபைகள் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு வரும் அமைச்சர் பிரேமதாசா தனது முதலாவது வேலையாக யாழ். மாவட்ட கிராமசபைத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். இதற்கு முதல் பலாலி விமான நிலையத்தில் வைத்தே சகலகிராமசபைத் தலைவர்களும் அமைச்சருக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவார்கள். (கா. நி)

# கதவுகள் திறந்தன
## 3 ஆண்டின் பின்னர்

அளவெட்டி, புதன் மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது.

அச்சுவேலியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திப் பாடசாலை கடந்த மூன்று ஆண்டுகளாக இயங்காது மூடப்பட்டுக் கிடந்தது. இக் கிராம அபிவிருத்திப் பாடசாலை நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

இப்பாடசாலையில் கிராம அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சி பெற வலி-வடக்கு வடமராட்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்களினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நேற்று முதல் பயிற்சி பெற தொடங்ள்கள்ளனர்.

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கம்பர் கவி விருந்து

'எம்பிரான் புகழ் பாடும் தம்பிரான்' எனத் தமிழக அறிஞர் புகழ்மாலை சூட்டிய இராமாயண ரசிகமணி நல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் இராமாயண காதையை புதிய புதிய கருத்துக்களுடன் கவிநயம் சொட்டச்சொட்ட படைத்து அளிக்கிறார்.

25-1-1969

'ஈழநாடு' வாரமலரில் ஆரம்பமாகிறது.

## அரசாங்க..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் வேண்டுமானால் சிங்களத்திலும் ஒரு போதனையை நடாத்தி சிங்கள மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளட்டும். இதனைத் தமிழரசுக்கட்சி வரவேற்கிறது. அதே போன்று தெஹிவளை கனிஷ்ட பல்கலைக்கழகத்திலும் தமிழிலும் போதனையாற்ற வேண்டும்.

இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது- பிரிவினையொன்றைஏற்படுத்திதனித் தமிழ் நாடொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை வலுப்படுத்துவதாகஉள்ளது. இதற்கு தேசிய அரசாங்கத்திலுள்ளவர்களே பொறுப்பாளிகள்.

கோட்டை எம். பி. திரு. ஸ்ரான்லி திலகரத்தின (எஸ்.எல்.எல்.பி) பேசுகையில், தமிழரசுட்சி இனியாவது தனது தவறை உணர்ந்து சிந்தித்துச் செயலாற்றவேண்டுமென்றும், தமது கட்சி சிறுபான்மையினருக்கு சில முறைகளை விட்டுள்ளதென்றும், இனி அப்படி நடந்து கொள்ள மாட்டாதென்றும் கூறினார்.

## உள்ளூராட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

னர் அன்று மாலை யாழ்ப்பாண மாநகரசபையின் ஆதரவில் அமைச்சருக்கும் அவருடன் வரும் குழுவினருக்கும் தேநீர் விருந்தும் அளிக்கப்படும்.

அமைச்சருக்குநல்லதொரு வரவேற்பு அளிக்கவேண்டுமென 11 அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு நகரமுதல்வரிடம் மகஜர் ஒன்றையும் நேற்று முன்தினம் கொடுத்திருந்தார்கள்.

அடுத்தமாதம் 2.ம் திகதி வரை இங்கு நிற்கும்அமைச்சர் தீவுப்பகுதி, கிளிநொச்சி உட்படயாழ்ப்பாண மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் விஜயம் செய்வார். ஒவ்வொரு இடங்களிலும் சிறப்பான வரவேற்பளிக்கவும் கிராமசபைகள், நகரசபைகள் பட்டினசபைகள்ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன. (கா. நி)

இப்பாடசாலை வகுப்புகள் திரு. வி. இராமச்சந்திரன் மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

# இளைஞர் தனக்குத் தானே தீமூட்டினர்

## செக்கில் நேற்றுநடந்த 3-வது சம்பவம்

பிராக், ஜன 22 செக்கோஸ்லவாக்கியாவில் தன்னைத்தானே தீமூட்டித் தற்கொலை செய்ய மற்றொரு 23 வயது இளைஞர் ஒருவர் இன்று முயற்சித்தார். இந்தச்சம்பவம்இன்று செக். சுதந்திர சதுககத்தில் நடைபெற்றது.

செக்கில் சோவியத் ஆக்கிரமிப்பை ஆட்சேபித்து இவர் தற்கொலை செய்ய முயன்றாராம். ஏற்கனவே ஒரு இளைஞர் தற்கொலை செய்து கொண்டது தெரிந்ததே. இன்னொரு இளைஞர் தற்கொலை செய்ய முயன்றார். இவர் 3-வது இளைஞராவார்.

சுதந்திரசதுக்கத்தில் தன் உடைகளில் தீமூட்டிக் கொண்டுஓடியபோது, மாணவர்கள் இவர் பின் துரத்திச் சென்று காப்பாற்றினர்களாம்.

இதுசம்பந்தமாக செக். பிரதமர்ஷேர்னிக்ஒரு எச்சரிக்கையைஇன்று பிராக்கில் விடுத்தார். தீவிரவாதிகளின் செயல் வலுவடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

# தனித் 'தமிழ் நாடு' கோரும் இயக்கம் ஆரம்பமாகும்

**திருச்சி, ஜன. 22 இந்திய யூனியனிலிருந்து பிரிந்து பூரண சுயாட்சி உரிமையுள்ள சுதந்திரத் 'தமிழ்நாடு' அமைக்கக் கோரி, தமிழ் நாடு முழுவதும் இயக்கம் ஆரம்பிப்பதென்று திருச்சியில் நடந்த தமிழ்நாடு மாணவர் பேரவை தீர்மானித்திருக்கின்றது. சுதந்திரத் 'தமிழ்நாடு' கோரித் தொடங்கவிருக்கும் கிளர்ச்சி இயக்கத்தை அடுத்த மாம் முதல் வாரத்திலேயே ஆரம்பிப்பதென்றும் மாணவர் பேரவை முடிவுசெய்திருக்கின்றது.**

இந்தித் திணிப்பை எதிர்ப்பது சம்பந்தமாக ஆராய்வதற்குத் தமிழ்நாடு மாணவர் பேரவை நேற்றுத் திருச்சியில் கூடியது. இக் கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது சம்பந்தமாகப் பலரும் தெரிவித்த யோசனைகள் ஆராயப்பட்டன. இந்த யோசனைகளில் ஒன்றுதான் இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு தனியாகப் பிரிந்து சுயாட்சி உரிமையுள்ள சுதந்திரத் 'தமிழ்நாடு' அமைக்கவேண்டும் என்பதாகும். இந்த யோசனை பின்னர் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது கிளர்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

## பாடசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வேறு சில கல்லூரிகளில் சேர்த்துவிட வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். பெற்றோர்கள் ஆசைப்படுவதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. தங்கள் பிள்ளைகள் சிறந்த கல்வி பெற வேண்டுமென்று பெற்றோர் விரும்புவதில் தவறில்லை. சைவப் பெற்றோர்கள் இந்து மகளிர் கல்லூரியை மற்றக் கல்லூரியிலும் பார்க்க சிறந்த கல்விபெறும் கல்லூரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருவாளர்கள் ஏ.வி.குலசிங்கம், எஸ். ஆர். கனகநாயகம், ஜனுப் எஸ்.ஏச், எம். சகீது, முதலியார் எஸ்.முத்துத்தம்பி ஆகியோரும் பேசினார்கள்,

## தற்கொலை

யாழ்ப்பாணம், வியாழன் திருமணமான நான்கு பிள்ளைகளாலும் கவனிக்கப்படாத வயோதிபத் தந்தை ஒருவர் நச்சுத் துராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

நீர்வேலி வடக்கில் நடைபெற்ற இச்சம்பவத்தில் பெரியதம்பி கந்தையா என்பவரே இவ்வாறு மரணமானவராவார். மரணமானவருக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. இவர்கள் தந்தையைக் கவனிப்பதில்லை. பாழடைந்த வீடொன்றின் ஒரு பகுதியில் இவர் தனியே வசித்துவந்தார். சம்பவம் நடந்த தினம் இவர் வாந்தியெடுத்தபின்னர்மரணமானார். இவருக்கு அருகில் நச்சுத் திராவகத் தகரம் ஒன்று கிடந்தது.

இவ்விபரங்கள் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டன.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஞானசுந்தரம் பிரேத பரிசோதனை நடத்தினார். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (கா. நி.)

## தனிச்சிங்களத்தில் கடிதங்களாம்

யாழ்ப்பாணம். வியாழன் தனிச் சிங்களக் கடிதத் தொடர்புகளின் ஆதிக்கம் யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் எழுது வினைஞர்கள் செய்வது என்னவென்று தெரியாமல் இருக்கின்றனர்.

கடிதத் தொடர்புகளை மட்டுமன்றி, கணக்கு விபரங்களையுமே தனிச் சிங்களத்தில், இலங்கைப் புகையிரத இலாகாவினர் இங்கு அனுப்பிவைப்பதே இதற்குக் காரணமாம்.

## மரண அறிவித்தல்

**மூத்தவி ஐயம்பிள்ளை**

பொன்னம்மாவின் அருமைக் கணவரும், ஒப்பந்தகாரர் திரு. கதிரவேலு, திரு. பாலப்பா, திரு. நடேசன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சி. நாகமுத்துவின் மாமனாரும், சிவபாக்கியம், இந்திராதேவியின் பேரனுமாகிய மூத்தவி ஐயம்பிள்ளை காலமாகி விட்டார். அன்னாரின் ஈமைக் கிரிகைகள் 23. 1. 69வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் கட்டிபிட்டி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும். 619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org